விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 14 வெள்ளிக்கிழமை (26.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 069

## தெல்லிப்பழை வைத்தியசாலை
## மருத்துவர் உட்பட
### வடக்கில் இருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை வைத்திய சாலை மருத்துவர் உட்பட வடக்கில் 2 பேருக்கு நேற்று வியாழக்கிழமை கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய 19

## மோதல் முடிவடைந்து 12 ஆண்டுகளாகியும்
# பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை

### ஐ.நா மனித உரிமை ஆணையாளர்



- இலங்கையில் கடந்த கால மனித உரிமை மீறல்கள் மீண்டும் நிகழலாம்.
- வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் பொறுப்புக்கூறலில் இலங்கை தொடர் தோல்வி.
- சிவில் செயற்பாடுகளில் இராணுவ பங்களிப்பு அதிகரிப்பு.
- இலங்கையின் பொறுப்புக்கூறலுக்கு சர்வதேசம் மாற்றுவழியைத் தேட வேண்டும்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா ஆணையாளரின் பரிந்துரையை ஏற்றுக்கொள்க
### இலங்கையிடம் சுவிஸர்லாந்து வேண்டுகோள்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துமாறு சுவிஸர்லாந்து இலங்கையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. 19

## அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு உட்பட
# தமிழரின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும்



### ஐ.நாவில் இலங்கை தொடர்பாக இந்தியா

*(ஜெனிவா)*

**அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு உட்பட தமிழ் சமூகத்தின் நியாயமான அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என இலங்கை தொடர்பாக ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி இந்திராமணி பாண்டே தெரிவித்தார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு உட்பட தமிழ் சமூகத்தின் உரிமைகளைமதிப்பது, இலங்கை ஒற்றுமைக் 19

## தேசிய வெசாக் நயினாதீவில்
### அலரிமாளிகை கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய வெசாக் பண்டிகை தினத்தை யாழ்.நயினாதீவில் நடத்துவதற்கான 19

## கொரோனா 2 பேர் பலி
### +466 தொற்றாளர்கள்

(கொழும்பு)

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 பேர் நேற்றும் உயிரிழந்துள்ளனர். 19

## உங்கள் மகனை அல்லது கணவரை இழப்பது குறித்து சிந்தித்துப் பாருங்கள்
### உறவுகளின் வலி தொடர்பில் கோட்டா அரசிடம் அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

உங்கள் மகனையோ அல்லது கணவரையோ இழப்பது குறித்து சிந்தித்துப் பாருங்கள் என அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்பிளிட்ஸ் தெரிவித்துள்ளார்.

காணாமலாக்கப் பட்டவர்களின் உறவு 19

## வவுனியாவில் குடும்பஸ்தர் மர்மமாக உயிரிழப்பு
### பொலிஸார் விசாரணை

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் பகுதியில் இளம் குடும்பஸ்தரின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் நேற்றுமுன் தினம் அவரது வீட்டில் இருந்துள்ளார். 19

### ஐ.நா எதிரொலி
## சடலங்களை புதைக்க அனுமதி
### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

ஐ.நா அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளை கோவிட்-19 நோய்த் தொற்றால் உயிரி 19

### நாடு முழுவதும் வைத்தியசாலைகளில்
## சிற்றூழியர்கள் புறக்கணிப்பு களமிறங்கிய இராணுவம்

(கொழும்பு)

நாடு முழுவதும் வைத்திய சாலை சுகாதார சிற்றூழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப் புறக்கணிப்பு போராட்டம் நடத்திவரும் நிலையில், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் நெருக்கடியை தவிர்க்கும் வகையில் இராணு 19

### ஐ.நா அமர்வு நடைபெறும் வேளை
## உறவுகளை சந்திக்கவுள்ள ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காணாமல் போனோரது உறவினர்களை சந்திக்கவிருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

வெளிவிவகார அமைச்சின் செய 19

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (25.02.2021) வியாழக்கிழமை
யாழ். பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணி
பட்டம் பெறும் எமது பாடசாலை அதிபர்

## திரு. தம்பிஐயா வாமதேவன்

(முதுகல்விமாணி)

அவர்களை வாழ்த்தி வழங்கும்
வாழ்த்துப்பா

பள்ளியின் முதல்வரே
பணிகளோ பற்பல
பாலரை அனுசரித்தே
அறிவுரைகள் வழங்கியே
அன்பினால் வழிகாட்டியே
நல்லவர் ஆக்கிடும் படைப்பாளியே

நீதியோடு நீங்களும்
கல்வியோடு கல்விமானாகவும்
விளங்கும் உங்களை
பட்டங்கள் பல பெற்று
பாரினில் பணி சிறக்க
வாழ்வினில் மிளிர்ந்து நிற்க
வாழ்த்துகின்றோம் உங்களை.

வாழ்க வளமுடன்
வாழ்க! வாழ்க

(5922)

வாழ்த்துவோர் :
யா/தந்தை செல்வா தொ. நி. ப
பாடசாலைச் சமூகம்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வும்

## அமரர் திருமதி வள்ளியம்மாள் சுப்பிரமணியம்

(திதி: தைமாத - பூர்வபக்க சதுர்த்தசி)

அன்னாரின் அமரத்துவ செய்தி அறிந்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களிற்கும், தொலைத் தொடர்புகள் மூலம் எம் துயரில் பங்கு கொண்டவர்களிற்கும், பல வழிகளிலும் உதவி செய்த அனைத்து நல் உள்ளங்களிற்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் (24.02.2021) புதன்கிழமை காலை 5.00 மணி அளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்றது. (26.02.2021) வெள்ளிக்கிழமை இன்று அன்னாரின் இல்லத்தில் ( சந்தணத்தறை - உடுப்பிட்டி) நடைபெறும் சபீண்டிகரண நிகழ்வு மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுப்பிட்டி. (C-1536) குடும்பத்தினர்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்று
(25.02.2021) வியாழக்கிழமை நடைபெற்ற
35 ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்வி
முதுமாணி M.Ed (2nd Upper ) பட்டம் பெற்ற
**கிளி / பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய**
அதிபர்

## திரு. குணசிங்கம் லெனின்குமார்

( B.A, PGDE, SLPS - III, M.Ed (2nd Upper)
அவர்களை வாழ்த்துவதோடு மேலும் பல
பட்டங்கள் பெற்று பதவி உயர்வுகள் பெற
பாராட்டி வாழ்த்துகின்றோம். (5925)




பாடசாலை நலன்புரிச் சங்கம் மற்றும்
பாடசாலைச் சமூகம்
கிளி / பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயம்

# அகவை 60 இல் மணி விழா காணும் எங்கள் அதிபர்...

## திரு. குழந்தைவேலு பாஸ்கரன் அவர்களின் சேவை நயப்பு பாராட்டு வாழ்த்துப்பா

Best Wishes

மணிவிழா நாயகனாம் எங்கள் அதிபர்
அறுபதிலும் இருப்பது போல்
அதிகாலை முதல் மாலை வரை
அனுபவப் பகிர்வுடனே அலுவலகக் கடமையை
செயற்படுத்தும் செயல் வீரன் ஐயா!
பகற் பொழுது போதாது என்று
இராப்பொழுதிலும் கடமையாற்றும்
பாஸ்கரன் அதிபர் அவர்கள் தம்
பேச்சாலும் செயலாலும் கிராம மக்களையும்
உள்வாங்கும் உன்னத வீரன் ஐயா!
கல்லூரித் தேவையை கணக்கிட்டு பார்த்து
கட்டிடங்கள், தளபாடம், கற்றல் உபகரணங்கள்
கற்று விலகிய பழைய மாணவரை சேர்ப்பதிலும்
தட்டச்சு முதல் கணனிச் செயற்பாடு வரை
தன்னிகரிலார் தலைவனாய் விளங்கி
பாடசாலை வரலாற்றை சுவட்டடியை பட்டறிந்து தொட்டறிந்து கேட்டறிந்து
இங்குவரும் பரம்பரைக்கு வழிகாட்டி வைத்தார்.
ஆசிரியர், மாணவர்கள், அயலவர்கள், உறவினர்களில் ஓர் அங்கமாய்
நீர் திகழ்ந்தீர் இக்கல்லூரியில் பத்து ஆண்டுகள் அதிபர் பதவியை வகிக்கும்
என்று பல நிகழ்வுகளில் தலைமை தாங்கி சாதனையாளரை உருவாக்கி
மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தி
மாகாணம் வரை இக் கல்லூரியின் புகழ் விளங்க வைத்தீர்
ஓய்வு நிலையிலும் உம் பணி இச் சமூகத்திற்கு
ஓயாது கிடைத்திட வேண்டும் என்று இறைவனை வேண்டி
குடும்பத்தின் குல விளக்காய் நீங்கள்
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

(C-1531)

பெற்றோர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகள்
யா / கரணவாய் மனியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலை



## திரு. குழந்தைவேலு பாஸ்கரன்

அதிபர் - யா/ கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலை
( SLTS - I, B.Com, M.Ed )

### சேவை விபரம்

- ஆசிரியர் - பு/ஆண்டிமுனை தமிழ் வித்தியாலயம்
  1985.04.16 - 1988.02.25
- யா / கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
  1988.02.26 - 1989.12.31
- ஆசிரியர் - பு/மாம்புரி றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம்
  1990.01.01 - 1991.09.24
- ஆசிரியர் - யா/ கம்பர்மலை வித்தியாலயம்
  1991.09.25 - 2011.01.23
- ஆசிரியர் - யா/வல்வை சிவகுரு வித்தியாலயம்
  2011.01.24 - 2011.08.31
- அதிபர் - யா / கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த. பாடசாலை
  2011.09.01 - 2021.02.25

## விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் ஒன்றல்ல

# ஐ.நா.ஆணையாளரின் அறிக்கையை முற்றாக நிராகரித்தது இலங்கை அரசு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்சேல் பச்சலட் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளது.**

அத்தோடு, நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் தமது மக்களின் வாழ்க்கை உரிமை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நியாயமான நடவடிக்கைகளுடன், சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட ஒரு பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய அட்டூழியங்களை சமன் செய்வதாகத் தோன்றும் உண்மைத் தவறுகளால் நிறைந்திருக்கின்றன எனவும் இலங்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் இடம்பெற்று வருகிறது.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளதுடன், குறித்த அறிக்கையை நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற அமர்வில் சமர்ப்பித்தார்.

இதனையடுத்து, 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' தொடர்பான அறிக்கை மீதான உரையாடலில், காணொளி மூலம் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, குறித்த அறிக்கையை முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் உரிய நீதிமன்றத்தினால் அல்லது வேறு பொறிமுறையினூடாக உறுதிப்படுத்தப்பட்ட நம்பத்தகுந்த ஆதாரங்கள் இன்றி சிலரை இலக்கு வைத்து தடைவிதிப்பதற்கும் பயணத்தடை விதிப்பதற்கும் யோசனை முன்வைத்துள்ளமை இறைமையுள்ள நாடொன்றுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அரசியல் நிகழ்ச்சி நிரல் என அவர் இதன்போது தெரிவித்தார்.

அது நாட்டின் உரிமையை மீறும் செயல் என்பதுடன், இறையாண்மைக்கான அடிப்படை விடயங்களை மீறும் செயற்பாடு எனவும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கையின் அமைதி காக்கும் படையின் செயற்பாடுகளை மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டும் என மனித உரிமை ஆணையாளர் முன்வைக்கும் யோசனையை நிராகரித்துள்ள அவர், தொழில் ரீதியாக செயற்படும் இறைமையுள்ள ஒரு நாட்டின் இராணுவம் மீது சுமத்தப்படும் அழுத்தம், ஐக்கிய நாடுகளின் கொள்கைகளை மீறுவதாகவும் தெரிவித்தார்.

20 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தினூடாக நீதிமன்றத்தின் கட்டுப்பாடு மற்றும் சமநிலைக்கு அழுத்தம் ஏற்படுவதாக மிச்சேல் பச்சலட் தனது அறிக்கையில் சுமத்தும் குற்றச்சாட்டையும் இலங்கை அரசாங்கம் முழுமையாக நிராகரிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வேறு நாடுகளின் அழுத்தம் காரணமாக இலங்கை போன்ற ஒரு தனி நாட்டை, எவ்வித சாட்சியங்களும் இன்றி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்கு மேற்கொள்ளும் முயற்சி மிகவும் அபாயகரமானது என்பதால் இது குறித்து ஏனைய நாடுகளும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

அறிக்கையின் உள்ளடக்கங்கள், நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் தமது மக்களின் வாழ்க்கை உரிமை ஆகிய வற்றைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நியாயமான நடவடிக்கைகளுடன், சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட ஒரு பயங்கரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய அட்டூழியங்களை சமன் செய்வதாகத் தோன்றும் உண்மைத் தவறுகளால் நிறைந்திருக்கின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சபை மற்றும் அனைத்து ஐக்கிய நாடுகள் அமைப்புக்களுடனான தமது தொடர்ச்சியான ஒத்துழைப்பு மற்றும் ஈடுபாடுகள் இருந்தபோதிலும் வெளிப்புறமாக இயக்கப்படும் சக்திகளை தொடர்ந்தும் வலியுறுத்துவதானது பல சவால்களை ஏற்படுத்துவதாக அமைவதுடன், இதுபோன்ற செயன்முறைகள் ஐக்கிய நாடுகளின் அனைத்து உறுப்பு நாடுகளையும் பாதிக்கும் ஆபத்தான முன்னுதாரணத்தையும் அமைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் உந்துதல்களால் உந்தப்பட்டு, இந்த சபையால் இலங்கை மீது செலுத்தப்பட்டுள்ள கவனத்திற்காக தாங்கள் வருந்துவதாகத் தெரிவித்த தினேஸ் குணவர்த்தன, இந்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்ட எந்தவொரு தீர்மானமும் சபையால் நிராகரிக்கப்பட்ட வேண்டும் என இலங்கை இந்தச் சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். (நி)




பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளின் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. கொழும்பில் அமைந்துள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்பாக மக்கள் பொறுப்பு மையத்தின் உறுப்பினர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

## சாதாரண தரப் பரீட்சார்த்திகளுக்காக இன்று ஆட்பதிவு திணைக்களம் திறந்திருக்கும்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி பௌர்ணமி தினம் என்ற போதிலும் இன்று வெள்ளிக்கிழமை ஆட்பதிவுத் திணைக்களம் திறக்கப்பட்டிருக்கும் என்று ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மார்ச் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள சாதாரண



தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள இதுவரையில் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளாத பரீட்சார்த்திகளுக்கு அதனை வழங்குவதற்காக மாத்திரம் ஆட்பதிவு திணைக்களத்தை திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள பிரதான அலுவலகமும் காலி, குருநாகல், வவுனியா மற்றும் மட்டக்களப்பிலுள்ள மாவட்ட அலுவலகங்களும் காலை 8.30 மணி முதல் மதியம் ஒரு மணி வரை திறந்திருக்கும்.

சாதாரண தரப் பரீட்சாத்திகளுக்காக முன்னெடுக்கப்பட்ட இந்த விசேட வேலைத் திட்டத்தில் பயன்பெற விரும்புபவர்கள் பாடசாலை அதிபர் அல்லது கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் வருகை தர வேண்டியது அவசியமாகும். (நி)

## புகையிரத பயணச்சீட்டுக்கான கடதாசிகளை இடைநிறுத்தியது நெதர்லாந்து நிறுவனம்

(கொழும்பு)

தொடரூந்து பயணச்சீட்டுகளுக்கு பயன்படுத்தப்படும் கனதியான கடதாசிகளை வழங்கும் நெதர்லாந்து நிறுவனம் குறித்த கடதாசிகளை வழங்கும் செயற்பாட்டை இடைநிறுத்தியுள்ளது.

இலங்கை மாத்திரம் குறித்த கடதாசிகளை பெற்றுக்கொள்ள கோரிக்கை விடுத்துள்ள நிலையில் அதற்கான செலவுத் தொகை அதிகமாகவுள்ளதாக தெரிவித்து குறித்த நிறுவனம் அவற்றை இடைநிறுத்தியதாக தொடரூந்து திணைக்கள பொது முகாமையாளர் டிலான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஜப்பானில் கடதாசி தயாரிக்கும் நிறுவனமொன்றிடம் இருந்து தொடரூந்துப் பயணச்சீட்டுகளுக்கு பயன்படுத்தப்படும் 30 மில்லியன் கனதியான கடதாசிகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் 60 மில்லியன் தொடரூந்து பயணச்சீட்டுகள் அச்சிடப்படுகின்றன.

இதற்கமைய ஜப்பான் நிறுவனத்திடம் இருந்து பெறப்படும் கனதியான கடதாசிகளை 6 மாத பாவனைக்குப் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தொடரூந்து பயணச்சீட்டுகளுக்காக பயன்படுத்தப்படும் கனதியான கடதாசிகளை இலங்கையில் தயாரிப்பதற்காக அதன் மாதிரிகள் வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஒரு தொடரூந்து பயணச்சீட்டுக்கு 2 ரூபா 50 சதம் செலவாகின்றது. இந்த நிலையில் எதிர்வரும் காலங்களில் இலத்திரனியல் பயணச்சீட்டுகளை அறிமுகப்படுத்துவதற்கு தொடரூந்து திணைக்களம் திட்டமிட்டுள்ளது. (நி-4)

# 100 வது டெஸ்டில் இஷாந்த்



இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான இஷாந்த் சர்மா, நேற்று முன்தினம் விளையாடிய இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் உட்பட 100 டெஸ்ட் போட்டியில் விளையாடிய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.


இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவர் இஷாந்த் சர்மா. 32 வயதான இவர் இதுவரை 99 டெஸ்டில் விளையாடியுள்ளார். 302 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். 74 ரன் கொடுத்து 7 விக்கெட் வீழ்த்தியது அவரது சிறந்த பந்து வீச்சு ஆகும்.

இங்கிலாந்துக்கு எதிராக நேற்று முன்தினம் தொடங்கிய 3ஆவது டெஸ்ட் போட்டியுடன் இஷாந்த்சர்மாவுக்கு 100 ஆவது போட்டி ஆகும். அதுவும் உலகின் மிகப்பெரிய மைதானத்தில் அவர் தனது 100 ஆவது டெஸ்டில் விளையாடுகிறார்.

இந்த மைல் கல்லை எட்டும் 11ஆவது இந்திய வீரர் இஷாந்த் சர்மா ஆவார். பந்து வீச்சாளர்களில் 4ஆவது வீரர் என்ற பெருமையை பெறுகிறார். மேலும், வேகப்பந்து வீச்சாளர்கள் பட்டியலில் 2ஆவது வீரராக இடம் பிடிக்கிறார். கபில் தேவிற்குப்பிறகு 100 டெஸ்ட் போட்டியில் விளையாடும் வீரர் இவர் ஆவார். (4)

# கார் விபத்தில் சிக்கினார் கோல்ப் வீரர் டைகர் வூட்ஸ்

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஒரு பெரிய கார் விபத்தில் கோல்ப் வீரர் டைகர்வூட்ஸ் காயமடைந்துள்ளதாக லொஸ் ஏஞ்சல்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





இதனால் டைகர் வூட்ஸுக்கு காலில் கடுமையான காயம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் லொஸ் ஏஞ்சல்ஸ் அதிகாரியொருவர் தனது டுவிட்டர் பக்கத்தில்,

"கலிபோர்னியாவில் டைகர் வூட்ஸ் ஒரு கார் விபத்தில் சிக்குண்டார். விபத்தினால் அவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. அவர் தற்போது அறுவைச் சிகிச்சையில் உள்ளார் என பதிவிட்டுள்ளார்.

விபத்தினையடுத்து டைகர் வூட்ஸ் மீட்புப் படையினரால் மீட்கப்பட்டு அம்புலன்ஸின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். டைகர் வூட்ஸ் கார் விபத்தில் சிக்கியது இது மூன்றாவது முறையாகும். (4)

# தேசிய டேபிள் டென்னிஸ்; தமிழக வீரர் சம்பியன்

தேசிய டேபிள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் தமிழக வீரர் சத்யன் முதல் முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

82 ஆவது தேசிய டேபிள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி அரியானா மாநிலம் பஞ்சகுலாவில் நடந்தது.



இதில் கடந்த செவ்வாய்க் கிழமை நடந்த ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் தமிழக வீரர் ஜி.சத்யன், சக மாநில வீரரும் 9 முறை சம்பியனுமான சரத் கமலை 11-6, 11-7, 10-12, 7-11, 11-8, 11-8 என்ற செட் கணக்கில் தோற்கடித்து முதல் முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். (4)

# கிரிக்கெட் சபை தேர்தல்; தேரர் வேட்புமனுத் தாக்கல்

இலங்கை கிரிக்கெட் சபையின் உப தலைவர் பதவிக்கு பத்தரமுல்லை சீலரத்ன தேரர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை அவர் இவ்வாறு வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்தின் 'St. Anthony's Sports Club' கிரிக்கெட் கழகத்தின் சார்பிலேயே அவர் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஞானம்ஸ் பெயின்ட் வெற்றிக்கிண்ணம்-2021

## விலகல் போட்டியில் வடமராட்சி வேங்கைகள் அணி 7 இலக்குகளால் வெற்றி

ஞானம்ஸ் பெயின்ட் வெற்றிக் கிண்ணத் தொடரின் விலகல் போட்டியில் கடந்த 20 ஆம் திகதி சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் வடமராட்சி வேங்கைகள் அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்று **Qualifier-2** இற்கு தகுதி பெற்றுள்ளது.

.முதலில் துடுப்பெடுத்தாடிய நோத் கொன்கியூரஸ் அணி 20 ஓவர்களில் 09 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களை பெற்றது.

கௌசிகன் ஆட்டமிழக்காது 21, சன்ஜெயன்-18 ஓட்டங்களை பெற்றனர். வடமராட்சி வேங்கைகள் அணி சார்பாக மோகனராஜ் 03 இலக்குகளையும், சாம்பவன்-02 இலக்குகளையும் கைப்பற்றினர்.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வடமராட்சி வேங்கைகள் அணி 14.3 ஓவர்களில் 03 இலக்குகளை இழந்து 106 ஓட்டங்களை பெற்றது. மோகன்ராஜ்-38, ருக்ஸ்மன் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

நோத் கொன்கியூரஸ் அணி சார்பாக நிருசிகன், கிஸாந்துஜன் தலா 01 இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியில் சிறந்த வீரராக வடமராட்சி வேங்கைகள் அணி சார்பாக மோகன்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். (க)



# மரண அறிவித்தல்

## முத்துச்சாமி அந்தோனிபிள்ளை



ஓமந்தை மருதங்குளத்தைப் பிறப்பிடமாகவும் ஓமந்தை காயாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி அந்தோனிபிள்ளை அவர்கள் 25.02. 2021 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் முத்துச்சாமி பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், பாலசிங்கம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் பாசமிகு கணவரும், ஜீவா பாபு, மாலினி, ரகு (ஓமந்தை தபாலகம்) ஆகியோரின் அன்பு தந்தையும், குமார், காலஞ்சென்ற ரவி மற்றும் ஜெசி, சசிக்குமாரி ஆகியோரின் மாமனாரும், தவம், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் மகேந்திரம், காலஞ்சென்ற இந்திரன் (நவம்) பவளராணி, வசந்தராணி, நந்தினி, பவானி ஆகியோரின் அன்பு சகோதரனும், காண்டீபன் (தபாலகம் ஓமந்தை), காயத்திரி கௌசி, சிந்து, துலானி, மதுசன், ருக்சன், சஞ்சீவன், டனுசன், கீர்த்திகன், கீரன் (சுவிஸ்) மாறன், நிருபா, கஜன், அகி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று 26.02.2021 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஓமந்தை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

ஓமந்தை,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

(c-1530)

# தொழில் வாய்ப்பை இழப்போருக்கு மாற்று ஏற்பாடு செய்யக் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் தொழில் வாய்ப்பினை இழக்கும் 7 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து தரப்பட வேண்டும் என சமத்துவக்கட்சியின் பொதுச்செயலாளர் மு.சந்திரகுமார் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. 2009 இற்கு பின்னர் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போது ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியில் பல நிறுவனங்கள் ஈடுப்பட்டன.

குறிப்பாக ஹலோ ட்ரஸ்ட், சார்ப், டாஸ் போன்ற நிறுவன ங்கள் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுப்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனங்களில் அன்று தொடக்கம் இன்று வரை சுமார் 7 ஆயிரத்திற்கும் இற்கு மேற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் பணியாற்றி வருகின்றார்கள். ஆனால் அடுத்த வருடத்துடன் கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவுக்கு கொண்டுவரப்படவுள்ளதால் இதில் பணியாற்றியவாகள் தங்களின் தொழில் வாய்ப்பினை இழக்கின்றனர். இதனால் அவர்களின் குடும்பங்களில் வாழ்வாதாரம் இழக்கப்படுகிறது.

இந்த நிலைமை மிக மோசமான பொருளாதார மற்றும் சமூகப் பின்னடைவை ஏற்படுத்தும்.மேற்படி தொழில் வாய்ப்பினை இழக்கும் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தொழிலின்றி சமூகத்தில் க்காணப்படுகின்ற நிலைமையானது ஆபத்தானது.

அதனால் பல்வேறு சமூக, பொருளாதார பாதிப்புக்கள் ஏற்படும். எனவே தொழில் வாய்ப்பினை இழக்கும் இவர்களின் நிலைமையினை கருத்தில் கொண்டு இவர்களுக்கான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (நி)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு: 1938.07.30 இறப்பு 2021.02.20

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி **இ.பரஞ்சோதி மூர்த்தி** அவர்களின் அன்புத் தாயார்

## அமரர்.நடராசா பவளம்மா


அவர்கள் 20.02.2021 அன்று பிரான்சில் இறையடி சோந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(5912)

பாடசாலை சமூகம்: யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்.

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். வைரமுத்து சுப்பிரமணியம் (மணியம்)



ஒய்வுநிலை சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்,
முன்னாள் வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்,
தமிழ்த்தேசிய கூட்டமைப்பு- கோப்பாய்,
முன்னாள் பொருளாளர்-முத்துமாரி அம்மன் கோவில்,
பொருளாளர்-பழைய மாணவர் சங்கம்
கிறிஸ்தவக்கல்லூரி-கோப்பாய்.

அன்னை மடியில் 17-04-1947
சிவன் மடியில் 08-03-2020

**திதி: 26.02.2021**

எம் வாழ்க்கையின் ஏணிப்படியாய்
எம்மை உயரத்திற்குக் கொண்டுசெல்ல
அச்சாணியாய் இருந்த எம் தெய்வமே
ஆண்டுகள் பல ஓடி மறைந்து விடும்
ஆனாலும் உம் நினைவுகள் என்பது
எம் நெஞ்சங்களில் நிலையாய் வாழும்

(5910)

குடும்பத்தினர்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

# கொரோனாத் தொற்றுக் காரணமாக

# 4 இலட்சம் சுற்றுலாத்துறையினர் பாதிப்பு

**(நல்லூர்)**

**வடக்கு மாகாணத்தில் கொரோனாப் பாதிப்பு காரணமாக கடந்தவருடம் பெப்ரவரி மாதத்திலிருந்து இதுவரை சுற்றுலாத் துறை சார்ந்த அனைத்து முதலீட்டு செயற்பாடுகள் மற்றும் பொருளாதார செயற்பாடுகள் உட்பட 4 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாத்துறை சார்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுலாத்துறை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்காக வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள குறித்த வேலைத்திட்டமானது மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாகவும் அத்தோடு வடக்கு மாகாணத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள 150 சுற்றுலா மையங்கள் தொடர்பான ஆவணங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

அத்தோடு எதிர்வரும் காலத்தில் வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறை சார்ந்த வேலைத் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டு வடக்கு மாகாண சுற்றுலாத் துறை ஏனைய பிரதேசங்களை போல முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதற்கு வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்திற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கு வேன் எனத் தெரிவித்தார்.

வடமாகாண சுற்றுலாப் பணியகமும் சர்வதேச சுற்றுலா சம்மேளனமும் இணைந்து வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் முகமாக முன்னெடுக்கப்பட்ட சுற்றுலாத்துறைசார் வழிகாட்டல் ஆவணம், சுற்றுலா மையங்களின் காணொளிகள் மற்றும் வழிகாட்டிகள் நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் முகமாக வழங்கப்பட்ட சுற்றுலா வழிகாட்டி பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த வடமாகாண பயிலுநர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

தனியார் விடுதியில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியிருந்தார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.இந்திய துணைத்தூதுவர் பாலச்சந்திரன், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்ட அரசாங்க அதிபர்கள், சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர், வடமாகாண சுற்றுலாத்துறைப் பணியக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(5-6-33)

## ஆளுமை திறனூக்க பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வாழ்க வையகம் வாழ்க வளமுடன் யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணியளவில் புதிய அன்பர்களுக்கான ஆளுமைத் திறனூக்கப் பயிற்சி ஆரம்பிக்கப் படவுள்ளது.

இப்பயிற்சியினை மன்றத்தின் செயலாளரும் துணைப் பேராசிரியருமான த.நந்தகுமரன் வழங்குவார்.

எனவே புதிய பயிற்சியாளர்கள் தங்களது பதிவினை முற்கூட்டியே மேற்கொண்டு பயிற்சியில் கலந்துகொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (5-6)

## வீதி அகலிப்புப் பணிகள் ஆரம்பம்

(நல்லூர்)

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் இருந்து இராசாவின் தோட்ட வீதி வரைக்குமான ஸ்ரான்லி வீதிப் பகுதியை வர்த்தகர்களின் முழுமையான சம்மதத்துடன் அவர்களின் ஒத்துழைப்புடன் வீதியின் இரு பக்கங்களிலும் வர்த்தக நிலையங்களுக்கான வாகனத்தரிப்பிடம் மற்றும் பாதசாரிகள் நடைபாதை, வடிகால் அமைப்புடன் வீதியினை அகலிப்பது தொடர்பில் கூட்டம் இடம்பெற்றது.

யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

அதன் பிரகாரம் வீதியின் இருபக்கமும் எல்லைக் கோடு இடும் பணி தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.(5-6-33)




## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மாட்டுவண்டி சவாரிச்சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் நாச்சிமார் அம்மன்கோவிலில் இடம்பெறவுள்ளது!

அனைத்து சவாரிப்பிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட மாட்டுவண்டிச் சவாரி சங்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-6)

## கலைஞர்களுக்கு ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்குட்பட்ட கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் படைப்புக்கள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்கான உதவியினை வழங்குவதற்கு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார செயற்றிட்டத்தின் ஊடாக ஊக்குவிப்பு நிதி வழங்கும் நடவடிக்கையினை கலாசாரப்பேரவை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்கு தரமதிப்பீட்டுக்குழுவின் தீர்மானத்துக்கமைய கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்குத் தகுதியானவர்கள் பிரதேச செயலக கலாசார பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்ப்பாண பிரதேச செயலாளர் எஸ்.சுதர்ஷன் அறிவித்துள்ளார். (5-6)

## வீதி நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

''உலக நீர் தினத்தை'' (22.03.2021) முன்னிட்டு வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு நடத்தும் பாடசாலை கல்வியை நிறைவுறுத்திய இளைஞர்களுக்கான வீதி நாடகப் போட்டி - 2021 இடம்பெறவுள்ளது.

"நீரின்றி அமையாது உலகு" என்னும் தொனிப்பொருளில் இடம்பெறும் இப்போட்டியில் கதாபாத்திரங்களின் எண்ணிக்கை 10 இற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். கதாபாத்திரங்களின் வயதெல்லை:- 19 - 40 வயதிற்குட்பட்டோர், பங்குபற்றுநர்களின் வதிவிடம் :- வடக்கு மாகாணத்திற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும், வீதி நாடகத்திற்கான நேர எல்லை :- 15 - 25 நிமிடங்கள். மற்றும் நேரடி வாத்தியங்கள் மட்டும் (ஆர்மோனியம் மற்றும் தாள வாத்தியங்கள்) பயன்படுத்த முடியும்.

இப்போட்டிக்கான முடிவுத் திகதி :- 15.03.2021 ஆகும். வெற்றியாளர்களுக்குப் பணப்பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். ஒவ்வொரு பங்குபற்றுநர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை எமது இணையத்தள முகவரியான **edumin.np.gov.lk** இலும் எமது அமைச்சின் வரவேற்பு உத்தியோகத்தரிடமிருந்தும் இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

கதாபாத்திரங்கள் ஒரு வீதி நாடகத்தில் மட்டுமே பங்குபற்ற முடியும். போட்டியில் கலந்து கொள்வதன் மூலம் படைப்பின் பதிப்புரிமை வடக்கு மாகாண கல்வி அமைச்சிற்கானதாகும்.

தேர்ச்சி பெற்ற நடுவர் குழுவொன்றின் மூலம் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் என்பதுடன் நடுவர் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

விண்ணப்பத்தின் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''உலக நீர் தின வீதி நாடகப் போட்டி 2021'' எனக்குறிப்பிட்டு தபால் மூலம் அல்லது நேரடியாக செயலாளர், கல்வி அமைச்சு, வ.மா., செம்மணி வீதி, நல்லூர் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

போட்டி முடிவுகள் தினசரிப் பத்திரிகைகள் மற்றும் எமது இணையத்தள முகவரியான **edumin.np.gov.lk** இல் வெளியிடப்படும். வெற்றியீட்டிய வீதி நாடகங்கள் வடக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களில் காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2203 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (5)

## அனைவரும் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்-பிரதேச சபைத் தவிசாளர்



(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனாத் தொற்று வீட்டு வாசலைத் தட்டும் நிலை ஏற்பட்டிருப்பதாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

கொரோனா தொடர்பான அண்மைக்கால தரவுகள் அச்சமூட்டுகின்றன. தற்போது ஆரம்பத்தில் இருந்த நிலைமை இல்லை. வெகுவாக கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளது.

இருப்பினும் பொதுமக்கள் அச்சத்தில் இருந்து விடுபட்டவர்களாக உள்ளனர். இதனால் பாரிய விளைவுகள் ஏற்படலாம். தென்மராட்சியின் பல பாகங்களிலும் சமூகத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனா கொத்தணி உருவாகும் அளவிற்கு தென்மராட்சியில் நிலைமை மோசமாக உள்ளது.

பொதுமக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது. சுகாதாரப் பிரிவினர் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வருகின்ற போதிலும் யாழில் கொரோனாத் தொற்று அதிகரித்துச் செல்கிறது.

எனவே மக்கள் அனைவரும் சமூகப் பொறுப்புடன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (5-6-30)



இலங்கையினால் கொள்வனவு செய்யப்பட்ட 5 இலட்சம் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா- ஜெனேகா கொவிட்-19 தடுப்பூசிகள் நேற்று இந்தியாவிலிருந்து நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

# கட்டாய தகனம் குறித்த மனு

## கனேடிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொவிட் தொற்றினால் உயிரிழப்பவர்களின் உடல்கள் தகனம் செய்யப்படுகின்றமை தொடர்பில் கனேடிய பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் சல்மா ஸாஹிட் இந்த மனுவை சமர்ப்பித்து உரையாற்றினார்.

கனடாவில் உள்ள இலங்கையை பூர்வீகமாகக்கொண்டவர்கள் உள்ளிட்ட 13 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கையொப்பமிட்ட மனுவை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதாக இதன்போது சல்மா ஸாஹிட் குறிப்பிட்டார்.

கொவிட்-19 தொற்றினால் மரணிக்கும் அனைவரின் உடல்களையும் கட்டாய தகனம் செய்யும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கை தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோரிய மனுவில் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கையொப்பமிட்டுள்ளனர்.

இலங்கை அரசின் குறித்த நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் விஞ்ஞானபூர்வ ஆதாரங்கள் எவையும் இல்லை எனவும், உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்களுக்கு புறம்பாகவே அச்செயற்பாடு இடம்பெறுவதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறுபான்மையினரின் முஸ்லிம் மத, கலாசார நடைமுறைக்கு மதிப்பளிக்குமாறும் கட்டாயத் தகனத்தை நிறுத்துமாறும் இலங்கை அரசாங்கத்தை கனேடிய அரசாங்கம் வலியுறுத்த வேண்டும்என மனுவில் கையொப்பமிட்டுள்ளவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (நி)


## வீடு தேவை

சைவப்புலவர் இராசையா சிறிதரன் பெருமாள் கோயிலில் பணியாற்றுவதால் யாழ்ப்பாணத்திலேயே குறைந்த வாடகையில் வீடு தேவை.

மிகுந்த கஷ்டமாக இருப்பதனால்,யாராவது உதவி செய்யவிரும்பினால் தொடர்பு கொள்ள 077 980 7223 இலக்கத்தை அழைக்கவும். (இ)

கலாபூஷணம் இராசையா சிறிதரன்


# தொற்று அபாயம் உள்ள பகுதிகளில் இன்று முதல் தடுப்பூசி



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அபாயம் நிலவும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இன்று முதல் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக கொரோனாத் தடுப்பு இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். இந்தியாவிடம் கோரப்பட்டுள்ள 5 இலட்சம் கொரோனா தடுப்பூசிகள் நேற்று இலங்கைக்கு கிடைக்கப்பெற்றதாக அவர் குறிப்பிட்டார். (நி-8)


## பாராட்டி வாழ்த்துகிறோம்




யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்களாய் இருந்து யாழ்ப்பாண சர்வ கலாசாலையின் 35 ஆவது பட்டமளிப்பு விழாவில் சமூகவியல் சிறப்புக்கலைமாணியாக **விஜயகுமார் விஜயலாதன்** அவர்களும் அரசறிவியல் சிறப்புக் கலைமாணியாக **லோகநாதன் கட்சினி** அவர்களும் மகுடம் சூடியிருக்கிறார்கள்.

இவர்களை எமது நிறுவனத்தின் சார்பாக உவமார பாராட்டுகிறோம்.

பார்வையற்ற எம்மவர்களின் கல்வி முதலான சமூகப்பணிக்காக உதவும் எங்கள் உறவுகளே உங்கள் ஆதரவுக்கரங்களை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம்.

Congrats! Best Wishes! (இ)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்க சமூகம்.



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1986இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா:செவ் 6 சூரி1 ல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: A/L, Manager (Northern Province ) G.O.V
எதிர்பார்ப்பு:யாழ்ப்பாணம், வவுனியா சாதாரண படித்தபெண், உள்நாடு மட்டும்.
தொ.இ: B/11504

பிறப்பு:1986 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 32செவ் 2 சூரி0 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L,நிரந்தர Business Man
எதிர்பார்ப்பு:யாழ்ப்பாணம் மட்டும், சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11505

பிறப்பு:1977இந்து
நட்சத்திரம்:ரோகினி
கி.பா:செவ் 6 சூரி8 இல்
உயரம்:6
தகைமை/தொழில்: BBA, MBA, (London Degree) முகாமையாளர் PR உண்டு.
எதிர்பார்ப்பு:உள்நாடு ஆயின் படித்த வெளிநாட்டில் சமாளிக்கக்கூடிய பெண். சைவபோசனம் முக்கியம்
தொ.இ: B/11506

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: செவ் 10சூரி2இல்
உயரம்: 5.3
தகைமை/தொழில்:O/L, சொந்த பலசரக்குகடை.
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11507

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1983இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: செவ்.சூரி இல்
உயரம்:5.6
தகைமை/தொழில்:. B.Sc in Computer Science .Work –Admini, UN Habitat
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த மணமகன்
தொ.இ:G/11544

பிறப்பு:1985இந்து
நட்சத்திரம்:மகம்
கி.பா: 40செவ்.சூரி3ல்
உயரம்:4'11"
தகைமை/தொழில்:HNDA, நிரந்தர பட்டதாரி பயிலுநர்
எதிர்பார்ப்பு:அரச, தனியார் தொழில், உள்நாடு மட்டும்.
தொ.இ:G/11545

பிறப்பு:1990இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா:33செவ்6 சூரி0 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்:B.Sc , MSC
எதிர்பார்ப்பு:அவுஸ்திரேலியா மட்டும்
தொ.இ:G/11547

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்:சதயம்
கி.பா:72 செவ் 8சூரி1 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்: G.C.E- A/L, NCAT Work-Typist, AARI தனியார்,சொந்தம்
எதிர்பார்ப்பு:வெளிநாடு. உள்நாடு. உள்நாடு ஆயின் அரச உத்தியோகம்
தொ.இ:G/11550

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## 11 வது பிறந்த தின வாழ்த்து

20-02-2021

செல்வன் **பதுமிகன் கிருபாகரமூர்த்தி**



இன்று தனது 11 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் **கிருபாகரமூர்த்தி பதுமிகன்** அவர்கள் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிறோம்.

இவர் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 183 புள்ளிகளைப் பெற்றமைக்காக பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
அப்பா,அம்மா,சகோதரர்கள், அப்பம்மா,பெரியப்பா, பெரியம்மா,ஆசையப்பா, சித்தப்பாமார்,சித்திமார், மாமாமார்,அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார்.

சுன்னாகம், வாதரவத்தை.

(C-1512)

# கொரோனா தொற்றுக் காலப்பகுதியிலும் தொற்றா நோயாளர்கள் அதிகரிப்பு

## நூறிற்கும் மேற்பட்ட சிறுவர்கள் நீரிழிவு நோய்க்கு சிகிச்சை பெறுகின்றனர்

### வைத்திய நிபுணர் அதிர்ச்சித் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தில் நூறிற்கும் மேற்பட்ட சிறுவர்கள் நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை பெற்று வருவதாக சிறப்பு வைத்திய நிபுணர் சி.அரவிந்தன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தில் நூறிற்கும் மேற்பட்ட சிறுவர்கள் நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை பெற்று வருகிறார்கள். முன்னைய காலங்களில் சிறுவர், சிறுமியருக்கு வகை-2 நீரிழிவு நோயே ஏற்படுவதுண்டு. ஆனால், தற்போது எத்தனையோ பாடசாலைகளின் சிறுவர், சிறுமியருக்கு நீரிழிவு நோய், உயர் குருதி அமுக்கம், கொலஸ்ரோல் இருக்கின்றது.

ஆகவே, எங்கள் வாழ்க்கை நடைமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய காலகட்டத்திலிருக்கின்றோம் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தின் சிறப்பு வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி. சி. அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய கொரோனாத் தொற்றுக் காலப்பகுதியில் சிறுவர்களுக்குத் தொற்றா நோய் என்பது பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது.

கொரோனா காலப் பகுதியில் எத்தனையோ பாடசாலை மாணவர்களுக்கு ஏறக்குறைய ஐந்து கிலோ கிராமாக உடல் பருமன் அதிகரித்துள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரமல்ல ஆசிரியர்களுக்கும் இந்தக் காலப் பகுதியில் உடல் பருமன் அதிகரித்துள்ளது.

எனவே, கல்வி விழிப்புணர்வுக்குச் சமாந்தரமாக ஆரோக்கியமான வாழ்வு சம்பந்தமான விழிப்புணர்வும் ஏற்படுவது காலத்தின் கட்டாயமாகவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5.6.18)

# கசிப்புடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய 19 லீற்றர் கசிப்புடன் நேற்று முன்தினம் தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கல்மடுப்பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார் என தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கிங்ஸ்லி கேரத் தெரிவித்தார். (5-6-316)

# பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

பல்வேறு கோரிக்கையை முன்வைத்து நாடு பூராகவும் சுகாதார பணியாளர்கள் இரண்டாவது நாளாகவும் மேற்கொண்டுள்ள பணிப்புறக்கணிப்பு காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளிலும் பணிப்பகிஷ்கரிப்பு நேற்றும் முனனெடுக்கப்பட்டது.

இந்நிலையில் வைத்தியசாலையின் செயற்பாடுகளும் வெளிநோயாளர் பிரிவு, மாதாந்த சிகிச்சை போன்ற செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருந்தும் மருந்துகள் பெற முடியாத நிலையும் காணப்பட்டது.

சிலர் சிகிச்சை பெறாமலும் திரும்பிச் சென்றுள்ளனர். (5-6-316)

# அரச காடுகளை பயன்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல்

(பனிக்கன்குளம்)

வன ஜீவராசிகள் மற்றும் வன பரிபாலன அமைச்சின் சுற்று நிருபத்திற்கேற்ப ஒதுக்கப்பட்ட காடுகள் தவிர்ந்த ஏனைய அரச காடுகளை அபிவிருத்திக்காக பயன்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலானது மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்களுக்கு கையளிக்கப்படக்கூடிய காணிகள் தொடர்பில் பிரதேச செயலாளர்கள், வனஜீவராசிகள், வனவள, நிலஅளவை, நீர்ப்பாசன திணைக்கள மற்றும் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவு சார்ந்த அதிகாரிகள் இணைந்த குழுவின் களவிஜயம் ஊடாக விடுவிக்கப்படக்கூடிய காணிகளை ஆராய்ந்து பிரதேச காணிப் பயன்பாட்டுக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்து பொருத்தமான தொடர் நடவடிக்கையினை முன்னெடுத்துச் செல்வதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அடையாளம் காணப்பட்ட இடங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும் காணி தொடர்பான சிறுபிரச்சினைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து உடனடியாக தீர்த்து வைக்கும்படி பிரதேச செயலாளர்களிடம் மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மாகாண காணி ஆணையாளர், பிரதேச செயலாளர்கள், வனஜீவராசிகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர், மாவட்ட செயலக காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட உதவி வனவளப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக காணிப்பிரிவு உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (5.6.281)

# ஒரு இலட்சம் காணித்துண்டு வழங்கும் திட்டத்திற்கான நேர்முகத் தேர்வு



(தருமபுரம்)

கரைச்சி பிரதேச செயலகத்தில் இளம் தொழில் முனைவோருக்கான ஒரு இலட்சம் காணித் துண்டுகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கான நேர்முகத் தேர்வு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கட்டம் கட்டமாக நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

நேர்முகத்தேர்வில் 40 பேர் வரை அழைக்கப்பட்டனர். வன்னேரிக் குளம் ஆனைவிழுந்தான் போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் நேர்முகத் தேர்வில் பங்கு பற்றினர்.

இந்நிகழ்வு கரைச்சி பிரதேச செயலாளர் மற்றும் காணிப்பயன்பாட்டு உப யோகத்திட்டமிடல் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. (5-6-316)



முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் ஆடைக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றது. கிராம உத்தியோகத்தர் எஸ்.வசீகரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.எஸ்.உமாமகள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். மேலும் முல்லைத்தீவு மாதர் சங்கங்களின் இணையத் தலைவி திருமதி. இமக்குலேற்றா புஸ்பானந்தனும் கலந்துகொண்டார்.

# முருங்கன் சமுர்த்தி வங்கி கணனிமயப்படுத்தப்பட்டது



(மன்னார்)

மன்னார்- நானாட்டான் பிரதேசத்திற்குட்பட்ட முருங்கன் சமுர்த்தி வங்கி கணனிமயப்படுத்துவதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் முருங்கன் சமுர்த்தி வங்கியில் இடம் பெற்றது.

இதில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் கலந்து கொண்டு கணனி செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், நானாட்டான் பிரதேச செயலாளர், மன்னார் சமுர்த்தி அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (5-6-285)

## இராசிபலன்

26.02.2021
மாசி 14, வெள்ளிக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 3.46 மணிவரை
ஆயில்யம் பிற்பகல் 12.27 மணிவரை
சுபநேரம் 6.29-7.59 மணிவரை
இராகுகாலம் 10.59-12.29 மணிவரை
சந்திராஷ்டமம் உத்தராடம், திருவோணம்
நடேசர் அபிஷேகம்


மேஷம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும்.


ரிஷபம்

வழிபாடு காரிய வெற்றி தரும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்கள் சந்திப்பு இடம்பெறலாம்.


மிதுனம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு.


கடகம்

குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.


சிம்மம்

குடும்பச் சுமை கூடும் நாள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.


கன்னி

அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபவிரயங்கள் கூடும் நாள்.


துலாம்

அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்.


விருச்சிகம்

பயணங்களால் பலனுண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


தனுசு

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு


மகரம்

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை, சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம்.


கும்பம்

இனிய அனுபவங்கள் ஏற்படலாம், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


மீனம்

உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் விலகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொழில் நலனில் அதிக அக்கறை கூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

வீழ்ந்தாலும் வீரன் அடிபணிய மாட்டான்

# எசல பெரஹெராவில் தாக்குதல் நடத்துவதே சஹ்ரானின் இலக்கு

(கொழும்பு)

கண்டி எசல பெரஹெராவில் தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொள்வதே சஹ்ரான் ஹாஷிமின் பிரதான திட்டமாக இருந்ததாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் புதன்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர், மிகப் பெரிய அளவிலான வெடிபொருள் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி புத்தளம்-வணாத்தவில்லு பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் 2019 ஏப்ரல் 4 ஆம் திகதி சஹ்ரான் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் பெயர்கள் உள்ளிட்ட தாக்குதல் பற்றிய தகவல்களை இந்திய அதிகாரிகள் புலனாய்வு சேவைகளுக்கு வழங்கியிருந்தாலும் பாதுகாப்பு செயலாளர், தேசிய புலனாய்வுத் தலைவர், பொலிஸ்மா அதிபர், புலனாய்வு பணிப்பாளரும் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேநேரம், ஏப்ரல் 20 ஆம் திகதி சஹ்ரான் மற்றும் ஏழு தற்கொலை குண்டுதாரிகள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நியாயப்படுத்தும் உறுதிமொ



ழியை எடுத்துள்ளனர்.

மேலும் மாவனெல்லயில் புத்தர் சிலைகளை இடித்த சம்பவத்தின் முக்கிய சந்தேக நபர்களான ஷாஹித் மற்றும் சாதிக் ஆகியோர், க.பொ.த. சாதாரண தர தேர்வுக்கு தோற்றவிருந்த 30 மாணவர்களுக்கு பயிற்சி முகாம் ஒன்றை நடத்தியதாக ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# நிதி மோசடி வழக்கிலிருந்து மகிந்தானந்த விடுதலை



(கொழும்பு)

தொழிற்சங்கத்துக்கு சொந்தமான நிதியை தவறாகப் பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கிலிருந்து அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கிலிருந்து அவரை விடுவிப்பதாக கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை அறிவித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் இயங்குகின்ற ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் காங்கிரசின் தலைவராக இருந்தபோது, அந்த தொழிற்சங்கத்துக்கு சொந்தமான 39 இலட்சம் ரூபாய் நிதியை தவறாக பயன்படுத்தியதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தாவரங்களை அழிப்பதற்கு இடமளிக்கக் கூடாது வனவிலங்கு வனபாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்து

(கொழும்பு)

தாவரங்களை அழிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது என வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் இடம்பெறும் தாவர அழிப்பு செயற்பாடுகளை நிறுத்துவது குறித்து, பொலிஸ்மா அதிபருக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பில் அனைத்து பிரிவுகளூடாகவும் தொடர்ச்சியாக சோதனைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (நி)

# தபால் கட்டணங்களில் திருத்தம்

(கொழும்பு)

தபால் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்வது குறித்த யோசனையை அடுத்த மாதம் முன்வைக்க தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தபால் திணைக்களத்தின் நட்டத்தை குறைக்கும் வகையிலும் புதிய முறைமையை வகுக்கும் வகையிலும் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சாதாரண தபால் முத்திரை கட்டணம் 15 ரூபாயாக காணப்படுகின்றது.

எனினும் அதற்காக திணைக்களம் 22 ரூபாய் 75 சதத்தை செலவு செய்வதாகவும் துரித தபால் சேவைக்காக 50 ரூபாய் அறவிடும் நிலையில் தனியார் பிரிவுகள் அதற்காக 250 ரூபாவை அறவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)



# சிறுவர் அரங்கம்

## முல்லாவின் வீரசாகசம்



ஒரு பணக்காரர் வீட்டில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப் பிறகு அறுசுவை விருந்து ஒன்று நடைபெற்றது.

விருந்தில் அந்த ஊர் பிரமுகர்கள் பலரும் சாப்பிட்டவாறு அரட்டையடித்துக் கொண்டிருந்தனர்.

விருந்துண்ணுவோர் கூட்டத்தில் முல்லாவும் இருந்தார்.

பிரமுகர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஆள் தங்கள் வீரப் பிரதாபங்களைக் குறித்துப் பொய்யும் புரட்டுமான பல நிகழ்ச்சி களைத் தாங்கள் சாதித்ததாகக் கூறி ஏதோ பெரிய சாகசக்காரர்கள் போல் தற்பெருமையடித்துக் கொண்டிருந்தார்கள்.

முல்லா எல்லாவற்றையும் தலைகுனிந்து கேட்டுக் கொண்டிருந்தார். உடனே அவர் அங்கிருந்த பிரமுகர்களை நோக்கி "உங்களுக்கு நான் செய்த வீரசாகசம் ஒன்றைச் சொல்லட்டுமா?" என்று கேட்டார்.

"முல்லாவினால் கூட வீரசாகசங்கள் செய்ய முடியுமா?" என்று கூறி கலகலவென ஏளனமாகச் சிரித்த பிரமுகர்கள்" எங்கே உமது வீரசாகசத்தைகூறும்பார்ப்போம்" என்று கேட்டனர்.


"ஒரு தடவை ஒரு நடுக்காட்டில் பத்துப் பதினைந்து கொள்ளைக்காரர்களை நான் விரட்டி அடித்தேன், என் விருப்பம் போல் ஆட்டிப் படைத்தேன். நான் செல்லுமிடங்களுக்கெல்லாம் அவர்கள் நாய்களைப் போல என்னைப் பின்தொடர்ந்து ஓடிவந்தார்கள்" என்றார் முல்லா.

"அப்படியா? இது உண்மையிலேயே பெரிய விடயம்தான். உம் பின்னால் அவர்கள் ஓடி வருவதற்கு அப்படி என்ன மந்திர மாயம் செய்தீர்?" என்று பிரமுகர்கள் வியப்போடு வினவினார்.

"அது அப்படியொன்றும் பெரிய விடயம் அல்ல. அவர்களைக் கண்டதும் நான் பயந்து ஓடினேன். என்னைப் பிடிப்பதற்காக அவர்கள் துரத்திக் கொண்டு வந்தார்கள்" என்றார் முல்லா.

# மகாபாரதம்

## பீஷ்மர் 03



பல ஆண்டுகள் கழித்து, அவள் ஒரு குமாரனைப் பெற்றாள். உடன், அக்குழந்தையை கங்கையில் வீசும்படி சொல்ல, திடுக்கிட்ட மன்னனுக்கு நிபந்தனைகள் ஞாபகம் வர அப்படியே செய்தான்.

இது போல தொடர்ந்து ஏழு குழந்தைகளையும் செய்தான். எட்டாவது குழந்தை பிறந்த போது பொறுமை இழந்த மன்னன் "இதைக் கொல்லாதே நீ யார்? ஏன் இப்படி செய்கிறாய்? இக் குழந்தையாவது கொல்லாதே!" என்றான்.

உடன்...கங்காதேவி, "மன்னா, இம்மகனைக் கொல்லமாட்டேன். ஆனால், நிபந்தனைப்படி நடக்காமல் என்னை யார்? எனக் கேட்டதால் இனி உன்னுடன் வாழமாட்டேன். ஆனால், நான் யார் என்பதை சொல்கிறேன்" என்றாள்.

"நான் ஜன்கு மகரிஷியின் மகள். என் பெயர் கங்காதேவி. தேவர்களுக்கு உதவவே நான் உன்னுடன் இருந்தேன்.

நமக்குக் குழந்தைகளாக பிறந்த இவர்கள் புகழ் வாய்ந்த எட்டு வசுக்கள். வசிஷ்டரின் சாபத்தால் இங்கு வந்து பிறந்தனர். உம்மைத் தந்தையாகவும், என்னை தாயாகவும் அடைய விரும்பினர். அவர்கள் விருப்பமும் நிறைவேறியது. சாப விமோசனமும் அடைந்தனர்.

எட்டாவது மகனான இவன், பெரிய மகானாக திகழ்வான். இவனைப் பெற்றதுடன் என் கடமை முடிந்தது. எனக்கு விடை தருக" என்றாள்.

கங்காதேவியின் பேச்சைக் கேட்ட சந்தனு "ஜன்கு மக ரிஷியின் மகளே! புண்ணிய புருஷர்களான வசுக்களுக்கு வசிஷ்டர் ஏன் சாபம் இட்டார்? இவன் மட்டும் ஏன் மண்ணுலகில் வாழ வேண்டும். அனைத்தையும் விளக்கமாக சொல்" என்றான்.

கங்காதேவி கூறத் தொடங்கினாள்.

"மன்னா வருணனின் புதல்வனான வசிஷ்டர் முனிவர்களில் சிறந்தவர். மேருமலைச் சாரலில் தவம் செய்து கொண்டிருந்தார். அவரிடம் நந்தினி என்ற பசு ஒன்று இருந்தது.

ஒருநாள் தேவர்களாகிய இந்த எட்டு வசுக்களும் தத்தம் மனைவியருடன் அங்கு வந்தனர். அப்போது பிரபாசன் என்னும் வசுவின் மனைவி நந்தினியைக் கண்டு தனக்கு அது வேண்டும் என்றாள்.

மனைவியின் கருத்தை அறிந்த பிரபாசன்.."இது வசிஷ்ட மகரிஷிக்கு சொந்தமானது. இது தெய்வத் தன்மை வாய்ந்தது.

இதன் பாலைப் பருகும் மனிதர்கள் இளமை குன்றாமல், அழகு குறையாது நீண்ட நாள் வாழ்வார்கள்" என்றான். உடனே அவன் மனைவி மண்ணுலகில் எனக்கு ஜிதவதி என்ற தோழி இருக்கிறாள்.

(தொடரும்)

# இந்தோனேசியாவில் நிலச்சரிவு; 5 பேர் உயிரிழப்பு, 70 பேர் மாயம்



(இந்தோனேசியா) இந்தோனேசியாவின் மத்திய சுலவேசி மாகாணத்தில் தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், 70 பேர் காணாமல் போயுள்ளனர் என அந்நாட்டு மாகாண அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த சம்பவம் பரிகி மவுண்டோங் மாவட்டத்தில் உள்ள புரங்கா கிராமத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

காணாமல் போனவர்களை தேடும் பணி நடந்து வருவதாக கூறப்படுகிறது. (நி)

# கொவெக்ஸ் அமைப்பு வாயிலாக கொரோனா தடுப்பூசியை பெற்ற முதல் நாடு கானா

(அக்ரா)

**கொரோனாத் தடுப்பூசி மருந்தை வளரும் நாடுகளுக்கு விநியோகிக்கும் கொவெக்ஸ் அமைப்பின் மூலம் தடுப்பூசிகளைப் பெற்ற முதல் நாடாக கானா இடம்பிடித்துள்ளது.**



உலக சுகாதார நிறுவனம் கொவெக்ஸ் அமைப்பு வாயிலாக ஏழை மற்றும் வளரும் நாடுகளுக்கு கொரோனாத் தடுப்பூசி மருந்தை விநியோகம் செய்ய உள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் கொவெக்ஸ் அமைப்பு உலகளவில் சுமார் இரண்டு பில்லியன் கொரோனா தடுப்பூசிகளை விநியோகிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்நிலையில், ஒக்ஸ்போர்ட் மற்றும் அஸ்ட்ரா ஜெனெகா பல்கலைக்கழகம் உருவாக்கிய மொத்தம் 6 இலட்சம் தடுப்பூசிகள் கானாவின் தலைநகர் அக்ராவுக்கு நேற்று முன்தினம் புதன் கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு முக்கியமான தருணம் என உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளன.

மேற்கு ஆபிரிக்க நாடான கானாவில் கொரோனா வைரஸ் தொற்றினால் 80,700 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 580 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அமெரிக்காவில் குடியேறுவதை குறைக்க விதித்த நடைமுறைகளை தளர்த்திய பிடன்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் குடியுரிமை தேர்வில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தால் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாக ஜனாதிபதி ஜோபிடன் அறிவித்துள்ளார்.

இது மார்ச் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் பணி நிமித்தமாக குடியேறும் வெளிநாட்டவர்கள் அந்த நாட்டு குடியுரிமையை பெறுவதற்காக விண்ணப்பித்து தேர்வு எழுத வேண்டும்.

இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகம், வெளிநாட்டவர்கள் அமெரிக்காவில் குடியேறுவதை குறைக்க குடியுரிமை தேர்வு முறைகளை கடுமையாக்கியது.

இந்த நிலையில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ஜோ பிடன், குடியுரிமை தேர்வில் முந்தைய நிர்வாகத்தால் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாக அறிவித்துள்ளார். (நி)

# செய்திகளை பகிர சமூக ஊடகங்கள் கட்டணம் செலுத்தும் சட்டம் அவுஸ்திரேலியாவில் நிறைவேற்றம்

(கன்பரா)

சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் செய்திகளுக்காக செய்தி நிறுவனங்களுக்கு பணம் செலுத்துவது சட்டபூர்வம் என வகை செய்யும் சட்டம் அவுஸ்திரேலியாவில் நிறைவேற்றப்பட்டது.

செய்தித் தளங்களுக்கு பிரவேசிப்பதனூடாக செய்திகளை வாசித்தல் மற்றும் செய்திகளைப் பகிர்வதற்கு கடந்த வியாழக்கிழமை முதல் அவுஸ்திரேலிய பயனாளர்களுக்கு பேஸ்புக் நிறுவனம் தடை விதித்தது.


இந்நிலையில், கடந்த செவ்வாயன்று பேஸ்புக் நிறுவனம் மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய செய்தி பக்கங்கள் மீது விதித்த சர்ச்சைக்குரிய தடையை விலக்கிக் கொள்வதாக பேஸ்புக் அறிவித்தது.

இந்நிலையில் சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் செய்திகளுக்காக செய்தி நிறுவனங்களுக்கு பணம் செலுத்தும் சட்டம் அவுஸ்திரேலியாவில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்டத்தின் கீழ் பேஸ்புக் மற்றும் கூகுள் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் செய்திகளைப் பகிரும்போது ஒரு கணிசமான தொகையைச் சில அவுஸ்திரேலியச் செய்தி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டும்.

ஒரு செய்தியின் மதிப்பை பொறுத்து சமூக ஊடக நிறுவனங்கள் மற்றும் செய்தி நிறுவனங்களுக்கு மத்தியில் ஒரு நியாயமான முறையில் பேரம் பேசும் செயற்பாட்டை மேற்கொள்ள இந்தச் சட்டம் உதவும் என அவுஸ்திரேலிய அரசு தெரிவித்தது.

ஒருவேளை, செய்திகளுக்கான மதிப்பை இரு தரப்பினரும் சம்மதிக்கும் விதத்தில் நிர்ணயித்துக் கொள்ள முடியவில்லை என்றால், அச்செய்தியின் மதிப்பு ஒரு தனியார் நடுவர் மூலம் நிர்ணயிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சமூக ஊடகங்களின் வளர்ச்சியால் தங்கள் இலாபத்தை இழந்த செய்தி நிறுவனங்களுக்கு உதவுவதாக இந்தச் சட்டம் இருக்கும் எனவும் அவுஸ்திரேலிய அரசு தெரிவித்துள்ளது. (நி)

# ஈகுவடோரில் 3 சிறைகளில் கலவரம் 62 கைதிகள் உயிரிழப்பு



(ஈகுவடோர்)

ஈகுவடோரில் ஒரே நேரத்தில் 3 சிறைகளில் கலவரம் ஏற்பட்டு, அதில் 62 கைதிகள் பலியான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென்னமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈகுவடோரில் நீண்ட காலமாகவே சிறைச்சாலைகளின் நிலைமை மோசமான சூழலில் இருந்து வருகிறது. அந்த நாட்டில் மொத்தமுள்ள 60 சிறைகளில் 29 ஆயிரம் கைதிகளை மட்டுமே அடைத்து வைக்க முடியும். ஆனால் அந்த சிறைகளில் தற்போது 38 ஆயிரத்துக்கும் அதிகமான கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது ஒருபுறமிருக்க இந்த 38,000 சிறைக் கைதிகளை கண்காணிக்க வெறும் 1,500 சிறைக்காவலர்கள் மட்டுமே பணியில் இருக்கிறார்கள். இதனால் அங்குள்ள பல சிறைகளில் சிறை அதிகாரிகளை விட கைதிகளின் கையே ஓங்கியுள்ளது.

மேற்கூறிய காரணங்களால் ஈகுவடோர் சிறைகளில் அடிக்கடி கலவரம் மற்றும் வன்முறை சம்பவங்கள் நிகழ்கின்றன. இதில் ஏராளமான உயிர் பலிகள் ஏற்படுகின்றன.

இதன் காரணமாக கடந்த ஆண்டு இறுதியில் நாடு முழுவதும் உள்ள சிறைகளில் 90 நாட்களுக்கு அவசர நிலையை அந்த நாட்டின் ஜனாதிபதி மோரேனோ பிரகடனப்படுத்தினார். ஆனாலும் சிறைகளில் வன்முறையை கட்டுப்படுத்த முடியாததால் உயிர் பலிகள் தொடர்கின்றன. இந்த நிலையில் நேற்று முன்தினம் அங்குள்ள 3 சிறைகளில் ஒரே நேரத்தில் பெரும் கலவரம் வெடித்தது. (நி)

## எதிர்பார்ப்புகளுக்கு முரணானதாகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை முழுமையற்றதாகும். இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அஷோக அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

அனைவரும் எதிர்பார்த்ததை போன்றில்லாமல் இந்த அறிக்கை முற்றிலும் வேறுபட்டதாகவுள்ளது. அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக முன்னெடுக்கப்பட்ட சதித்திட்டமே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களாகும்.

நாட்டை பாதுகாக்கக்கூடிய வீரர் என்று கருதியே 69 இலட்சம் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்தனர். ஆனால் தற்போது அவரிடமிருந்து நாட்டை பாதுகாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மரங்களை வெட்டி சட்டவிரோதமாக கடமிப்பவர்களைக்கூட கைது செய்ய முடியாத அரசாங்கத்திற்கு எவ்வாறு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கையைக் கொண்டு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியையோ அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்களையோ கைது செய்ய முடியாது.

இது தொடர்பில் பேராயரும் விரைவில் அவரது நிலைப்பாட்டை மக்களுக்கு அறிவிப்பார் என்று எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

## வாகன விபத்தில் இருவர் பலி

(கொழும்பு)

பன்னல-கங்கானியம் முல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு காரொன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதில் பயணித்த 47 வயதான முச்சக்கரவண்டி சாரதியும் 17 வயதான சிறுமி ஒருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

## ஒரு தடுப்பூசியுடன் தொற்றுக்குள்ளாகாமல் தப்பிக்கலாம் என்ற எண்ணம் தவறானது

### முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்கின்றார் இராணுவத் தளபதி

(கொழும்பு)

**முதல் கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஒரு தடுப்பூசியின் மூலம் தொற்றுக்குள்ளாகாமல் தப்பிக்கலாம் என அதிக தன்னம்பிக்கை கொள்ளக்கூடாது என கொரோனா கட்டுப்பாட்டு தேசிய செயலணித் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

முதல் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட பின்னர் சிலர் முன்னெச்சரிக்கை இன்றி செயற்படத் தொடங்கியுள்ளனர்.



எனினும் முதல் தடுப்பூசி போட்டுக்கொண்டதும் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகிவிடாது எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் தொடர்ந்து சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

## சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக சாலிய பீரிஸ்

(கொழும்பு)

2021-2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக ஜனாதிபதியின் ஆலோசகர் சாலிய பீரிஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அதன்படி இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 26 ஆவது தலைவர் சாலிய பீரிஸ் ஆவார்.

2021-2022 ஆம் ஆண்டிற்கான புதிய தலைவரை தேர்வு செய்யும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தேர்தல் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது.

இத் தேர்தலில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான சாலிய



பீரிஸ் மற்றும் குவேர டி சொய்ஸா ஆகியோர் போட்டியிட்டனர். (நி-4)

# மரண அறிவித்தல்

## திருமதி.லீலாவதி விஸ்வலிங்கம்

யாழ்.காரைநகர் நடுத்தெருவை பிறப்பிடமாகவும் இலண்டன் Aylesbury ஐ வதிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி விஸ்வலிங்கம் அவர்கள் 15.02.2021 திங்கட்கிழமை இலண்டனில் இறைவனடி எய்தினார்.


அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகமுத்து - கமலம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் (முன்னாள் உரிமையாளர், நியூ விஜயா ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, சுந்தரமூர்த்தி அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நடராசா மற்றும் தனநாயகி, காலஞ்சென்றவர்களான குணவதி, தனலட்சுமி, தனபாலன் ஆகியோரின் மைத்துனியும், சசிகலா (இலண்டன்), விஜயேந்திரன் (இலண்டன்), பரந்தாமன் (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும்,

ரவீந்திரன், பரமேஸ் (உஷா), செல்வராணி ஆகியோரின் மாமியாரும், சபோசினி- கிருஷ்நாத், சர்மிலன், யஸ்மிலன், ரம்யா, யாமினி, அஷ்வினி, ஹிரண்யா, ஹர்னி, நிதேஷ் ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.02.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் 9 மணி வரையும் Divinity Funeral Care, 209 Kenton Road, Harrow, Middlesex, HA3 0HD என்ற முகவரியில் பார்வைக்காக வைக்கப்பட்டு,

பின்னர் காலை 10 மணி முதல் 11 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று Golders Green Crematorium Hoop Lane, Golders Green, London, NW11 7NL என்ற முகவரியில் அமைந்துள்ள சேமக்காலையில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



**தகவல்: குடும்பத்தினர்** 1533

**தொடர்புகளுக்கு:**

சசிகலா ரவீந்திரன்(மகள்- இலண்டன்) : 44 075 517 57970
விஜயேந்திரன் (மகன்- இலண்டன்) : 44 075 787 63402
பரந்தாமன் (மகன்- கனடா) : 011 647 9383332

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விளம்பரங்களை நம்ப வேண்டாம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவுறுத்து

(கொழும்பு)

**வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதாகக்கூறி, சமூகவலைத்தளங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் விளம்பரங்களை நம்ப வேண்டாம் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.**

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அந்த பணியகம் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

சமூக வலைத்தளங்கள் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதாக கூறி பலர் நிதி மோசடியில் ஈடுபட்டு வருவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் முன்வைக்கப் பட்டுள்ளதாக அந்தப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு குறித்த விளம்பரங்கள் சட்ட ரீதியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களால் மின்னணு ஊடகம் மற்றும் பத்திரிகைகள் ஊடாக மாத்திரமே மேற்கொள்ளப்படும்.

எனவே, சமூக வலைத்தளங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விளம்பரங்களை நம்ப வேண்டாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (நி-4)

# வெளிநாட்டின் கொள்கை திட்டத்திற்கு அடிபணிந்து முடிவெடுக்க மாட்டோம்

## வடக்கின் முத்தீவுகளை வழங்குவது குறித்து தீர்மானிக்கவில்லை

(கொழும்பு)

வடக்கில் உள்ள மூன்று தீவுகளில் நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி திட்டத்தை இந்தியாவிற்கோ அல்லது சீனாவிற்கோ வழங்குவது குறித்து இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லையென அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற வாய் மூல வினாக்கான நேரத்தில் வடக்கின் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகியவற்றில் புதிதாக நிர்மாணிக்கும் காற்றாலை மற்றும் சூரிய ஒளியின் உற்பத்தி திட்டம் குறித்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து உரையாற்றும்போதே மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் டலஸ் அழகபெரும இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "வடக்கின் மூன்று தீவுகள் சீனாவிற்கு குத்தகைக்கு கொடுக்கப்பட தீர்மானித்துள்ளதாக கூறப்படுகின்றது. இது தவறான கருத்தாகும்.

அதேபோல் இந்த மூன்று தீவுகளுக்குமான மின்சாரம் இன்றும் டீசல் மற்றும் ஜெனரேட்டர் மூலமாகவே பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

எனவே இப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். இதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என நினைக்கிறேன்.



எனவே மின்சாரத்தை பெற்றுக் கொடுக்க வேண்டியது தேசிய தேவையாகும்.

மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் இது குறித்து சர்வதேச விலைமனுக்கோரலுக்கு விடப்பட்டது.

இது இலங்கையின் முதலாவது கலப்பு விலைமனுக்கோரலாகும். காற்று மற்றும் சூரிய சக்தியினால் மின்சாரத்தை உருவாக்கும் முதலாவது வேலைத்திட்டமாகவே இது அமைந்தது.

எனவே, இதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுக்க சர்வதேச விலைமனுக்கோரல் விடப்பட்ட வேளையில், அதற்காக முன்வந்த தரப்பினர் பலவீனமான வர்களாக இருந்தனர்.

எனவே 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இரண்டாவது விலைமனுக்கோரலை அறிவித்தனர். இதற்கு நான்கு நிறுவனங்கள் முன்வந்தன. இந்த நான்கு நிறுவனங்களில் ஒன்று சீனா வினதும் மற்றையது இந்திய நிறுவனமாகவும் இருந்தது.

இந்த விலைமனுக் கோரலில் இந்திய நிறுவனம் 12 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அடிப்படையில் இந்த வேலைத்திட்டத்தை பெற்றுக்கொண்டது.

எனவே இந்த விலைமனுக்கோரலில் எந்த தவறும் இல்லை.

ஆனால் அமைச்சரவையில் இந்தத் திட்டம் இன்னமும் அங்கீகரிக்கப்படவில்லை.

ஏனென்றால் திறைசேரி ஏற்கனவே இந்த திட்டத்தை எவ்வாறு கையாளப்போகின்றது என்ற தொழில்நுட்ப ரீதியிலான தகவல்களை முன்வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியா இந்த திட்டத்திற்காக நிதி உதவியொன்றை செய்யவும் ஆர்வமாக உள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் எமக்கு அறிவித்தார்.

இந்த விடயத்தில் இப்போது வரையில் எந்த வித இறுதித் தீர்மானமும் எடுக்கவில்லை. எவருக்கும் அங்கீகாரம் கொடுக்கவும் இல்லை.

எனவே இதில் எந்தவொரு நாட்டின் தலையீடுகளோ அல்லது, இராஜதந்திர நகர்வுகளோ இல்லை.

இலங்கையின் தேசிய வளங்களை வேறு எந்தவொரு நாட்டுக்கும் கொடுக்கும் நோக்கமும். எமக்கு இல்லை.

எமது நாட்டின் தேசிய கொள்கையை உலகின் எந்தவொரு பலமான நாட்டின் கொள்கைத் திட்டத்திற்கும் அடிபணிந்து தீர்மானம் எடுக்க மாட்டோம் என்பது தெளிவாக தெரிவித்துக்கொள்கிறோம்" என அவர் தெரிவித்தார். (நி)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எதிரி எங்கே இருக்கின்றான்?

ஒரு காடு.அங்கே ஐந்துபேர் இருக்கின்றார்கள். யார் அவர்கள்? வேறு யாரு? பஞ்சபாண்டவர்கள் தான். வனவாசம் பன்னிரண்டு வருடம் அங்கே இருந்தாகவேண்டும்.

தருமன்–பீமன்–அர்ஜுனன்– நகுலன்–சகாதேவன் இவர்கள் தான் அந்த ஐந்து பேர்.

காட்டுக்குப் போன பஞ்சபாண்டவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்று போய் பார்த்துவிட்டு வரலாம் என்று நினைத்தார் ஒருத்தர். அவர் யாரு? அவர் தான் கிருஷ்ணர். உடனே புறப்பட்டு காட்டுக்குப் போனார். அவர்களைப் பார்த்தார். அவர்களோடு ஓர் இரவு தங்கினார். அப்பொழுது பஞ்சபாண்டவர்கள் அவருக்குக் காவல் காத்தார்களாம். இரவுக் காவல்.

ஒருத்தர் மாற்றி ஒருத்தர் கண் முழித்து காவல் காக்க வேண்டும். ஆளுக்குக் கொஞ்ச நேரம். முதலில் அர்ஜுனன் காவல் காத்தான். எல்லோரும் தூங்குகின்றார்கள். அவன் மட்டும் முழித்துக் கொண்டிருகின்றான்.அப்பொழுது எதிரிலே ஒரு உருவம் தெரிந்தது. உற்றுப் பார்த்தான். அது ஒரு பூதம். எதிரிலே கொஞ்ச தூரத்திலே நின்று கொண்டே இருந்தது.

இவன் நேரம் முடிந்தது. அடுத்தபடியாக நகுலன் காவல் காக்க வந்தான். இப்பொழுதும் அந்தப் பூதம் கண்ணிலே பட்டது. ஆனால் அது முன்னால் இருந்ததைவிட கொஞ்சம் பெரிதாக தெரிந்தது. இவனுக்கு அடுத்தபடியாக சகாதேவன், பீமன், தருமன் இப்படி மாற்றி மாற்றி காவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

வரவர அந்தப் பூதத்துடைய வடிவம் பெரிதாகிக் கொண்டே இருந்தது. ஒவ்வொருத்தரும் அதைக் கொல்ல முயற்சி செய்தார்கள். இரவுக் காவல் பணியில் பஞ்ச பாண்டவர்கள் இப்படி மாறி மாறி ஈடுபடுவதைப் பார்த்ததும் கிருஷ்ணர் தர்மரைப் பார்த்துக் கேட்டார். இந்தக் காவல் பணியிலே எனக்கும் ஒரு வாய்ப்பு கொடுக்கக் கூடாதா? நானும் கூட கொஞ்ச நேரம் கண் விழித்துக் காவல் காக்கின்றேன் என்றார்.

இதற்கு தருமர் சொன்னார். செய்யுங்களேன் இந்த உலகத்தையே பாதுகாக்கிறதும் நீங்கள் தான். பாண்டவர்களைப் பாதுகாக்கிறதும் நீங்கள் தான். இந்த பாதுகாவலன் பணியிலேயும் ஈடுபட வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் அதை வேண்டாம் என்று சொல்வதற்கு நாங்கள் யார்? என்றார்.

ஒவ்வொருத்தராக காவல் காத்து முடித்ததும் இப்பொழுது கிருஷ்ணர் வரவேண்டிய முறை காவலுக்குக் கிருஷ்ணர் புறப்பட்டார். இப்பொழுது தர்மர் சொன்னார்.

கிருஷ்ணா காட்டிலே ஒரு பெரிய பூதம் இருக்கின்றது. அது வரவர பெரிதாகிக் கொண்டே இருக்கு. அது உங்களுக்கு ஏதாவது இடைஞ்சல் கொடுக்கும். அதனால் நீங்கள் போகாமல் இருக்கிறது நல்லது என்றார்.அதற்கு கிருஷ்ணர் சொன்னார்.

இப்படி என்மேல் உனக்குச் சந்தேகம் வரலாமா? ஏன் இப்படிப்பட்ட சந்தேகம்? அது உன்னுடைய பலவீனம். நான் நிச்சயமாக காவல் பணி செய்யத்தான் போகின்றேன் என்றார். போனார். நடு இரவு இரண்டு மணியில் இருந்து மூன்றுமணி வரைக்கும் அவருடைய நேரம் 3. மணிக்கு மேல் அர்ஜுனன் வந்தான்.

பார்க்கின்றான். கிருஷ்ணர் சிரித்துக் கொண்டே இருக்கின்றார். அங்கே எதிரிலே பார்கின்றான். பூதத்தையும் காணோம் பிசாசையும் காணோம்.அர்ஜுனன் கேட்கின்றான். கிருஷ்ணா நீ அந்தப் பூதத்தை –அரக்கனை அழித்துவிட்டாயா? என்றான்.

இப்பொழுது கிருஷ்ணர் சொல்கின்றார். அர்ஜுனா நான் எந்தப் பூதத்தையும் பிசாசையும் அழிக்கவில்லை. என் கண்ணுக்கு அப்படி எதுவுமே தெரியவில்லை. எதுவுமே நம்முடைய பிரதிபலிப்புத்தான். நம்முடைய கோபம் தான் நமக்கு முன்னாடி அரக்கத்தனமாக காட்சியளிக்கின்றது. எவ்வளவுக்கு எவ்வளவு கோபம் அதிகரிக்கின்றதோ.. அந்த அளவுக்குச் சமமாக அதுவும் வளர்கின்றது. எனக்கு யார்மீதும் கோபமோ வெறுப்போ இல்லை.

உண்மையில் நமக்கு என்று யாரும் எதிரிகள் கிடையாது. நம்முடைய குணங்கள் தான் நமக்கு எதிரிகள். உள்ளே இருக்கின்ற உணர்வுகள் தான் நமக்குப் பிரதி பிம்பமாக வெளியே தெரிகின்றது. வெறுப்பே இல்லாமல் எல்லாவற்றையும் அன்பால் நிரப்பும் போது எங்கள் கண் முன்னாடியும் அன்பு தான் தெரியும். அரக்கன் தெரியமாட்டான் என்றார். இதைச் சரியாக புரிந்து கொண்டோமேயானால் எல்லோரும் இன்பமாக வாழலாம்.

எங்கள் ஆள் ஒருத்தன் இருக்கின்றார். அவர் சொன்னார். சேர் என் கண்ணுக்கு யாருமே தெரிய மாட்டேன் என்கின்றார்கள் என்றார். அப்படியா? என்றேன் ஆச்சரியமாக. ஆனால் ஒன்று சேர் எல்லோர் கண்ணுக்குமே நான் எதிரியாகத் தான் தெரிகின்றேன் என்று முடித்தார் அவர்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

15

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### தேர்தல் நாளின் பின் முக்கியமான நாட்கள்

தேர்தல் நாள் முடிந்தபின் ஜனாதிபதி நியமனத்திற்கு ஐந்து நாட்கள் முக்கியமாவை. அவையாவன, 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 8 ஆம் திகதி, டிசெம்பர் 14 ஆம் திகதி, டிசெம்பர் 23 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி மற்றும் ஜனவரி 20 ஆம் திகதி ஆகும். இந்நாட்களின் முக்கியத்துவம் பற்றி இப்போது பார்ப்போம்

**தேர்தல் நாள் முடிந்தபின் ஜனாதிபதி நியமனத்திற்கு ஐந்து நாட்கள் முக்கியமாவை. அவையாவன, 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 8 ஆம் திகதி, டிசெம்பர் 14 ஆம் திகதி, டிசெம்பர் 23 ஆம் திகதி 2021 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி மற்றும் ஜனவரி 20 ஆம் திகதி ஆகும். இந் நாட்கள் பற்றி இக்கட்டுரையில் எழுதப்பட்டுள்ளது.**

### டிசெம்பர் 8 ஆம் திகதி


தேர்தல் நாள் முடிந்தபின், மாநிலங்கள் வாக்குகளை எண்ணி, தேர்தல் முடிவுகளை அறிவிக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்தின் ஆளுநர் தேர்தலில் வென்ற தேர்வாளர் பிரதிநிதிக்குச் சான்று அளிப்பார். இந்தச் சான்றிதழில், தேர்வாளர் பிரதிநிதியின் பெயர், அவர் பெற்ற வாக்குகள், வெற்றியா அல்லது தோல்வியா என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

இந்த நடைமுறைகள் அனைத்தும் டிசெம்பர் 8 ஆம் திகதிக்குள் முடிக்கப்பட வேண்டும். எந்த மாகாணத்திலாவது தேர்தல் தொடர்பான பிரச்சினைகள் இருந்தாலும் டிசெம்பர் 8 ஆம் திகதிக்குள் தீர்க்கப்பட்டு, அல்லது மறு வாக்கு எண்ணிக்கை கோரப்பட்டாலும் அது நடத்தப்பட்டு முடிவுகள் டிசெம்பர் 8 ஆம் திகதிக்குள் அறிவிக்கப்பட வேண்டும். இத்தேர்தலில் எல்லா மாநிலங்களிலும் இவ்விடயம் எவ்வித பிரச்சினைகளும் இன்றி குறிக்கப்பட்ட திகதியில் முடிவுற்றது.

**தேர்தல் நாள் முடிந்தபின், மாநிலங்கள் வாக்குகளை எண்ணி, தேர்தல் முடிவுகளை அறிவிக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்தின் ஆளுநரும் தேர்தலில் வென்ற தேர்வாளர் பிரதிநிதிக்குச் சான்று அளிப்பார். இந்தச் சான்றிதழில், தேர்வாளர் பிரதிநிதியின் பெயர், அவர் பெற்ற வாக்குகள், வெற்றியா அல்லது தோல்வியா என்று குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த நடைமுறைகள் அனைத்தும் டிசெம்பர் 8 ஆம் திகதிக்குள் முடிக்கப்பட வேண்டும்.**

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுபவர் யாரென்று தேர்தல் நாள் இரவு தெரியவந்தாலும் இம்முடிவு ஒருபோதும் உத்தியோக பூர்வமாக இருக்காது. கடந்த நவம்பரில் நடந்ததைப்போல ஊடகங்கள், இணையத்தளங்கள் போன்றவை ஜனாதிபதித் தேர்தலின் முடிவு கணிப்புச்செய்து வெளியிட்டிருந்தன.

ஆனால் அவ்வாறு வெளியிட்டப்பட்ட எந்தவொரு முடிவும் அதிகார பூர்வமானதல்ல. அதற்குப் பதிலாக, மாநில மற்றும் உள்ளூர் தேர்தல் அதிகாரிகள் ஒவ்வொரு செல்லுபடியாகும் வாக்குகளும் கணக்கிடப்பட்டதை உறுதி செய்து முறையாக சான்றிதழ் அளிக்கும்போது தேர்தல் முடிவுகள் உண்மையில் உண்மையானவையும் உத்தியோகபூர்வமானவையும் ஆகும். தேர்தலுக்குச் சான்றிதழ் வழங்க ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதன் சொந்தக் காலக்கெடு உள்ளது. இது நவம்பர் பிற்பகுதி அல்லது டிசெம்பர் முற்பகுதியாக இருக்கலாம்.




**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுபவர் யாரென்று தேர்தல் நாள் இரவு தெரியவந்தாலும் இம்முடிவு ஒருபோதும் உத்தியோகபூர்வமாக இருக்காது. கடந்த நவம்பரில் நடந்ததைப் போல ஊடகங்கள், இணையத்தளங்கள் போன்றவை ஜனாதிபதித் தேர்தலின் முடிவு கணிப்புச் செய்து வெளியிட்டிருந்தன. ஆனால் அவ்வாறு வெளியிட்டப்பட்ட எந்தவொரு முடிவும் அதிகாரபூர்வமானதல்ல.**

முடிவுகளைச் சான்றளிப்பது என்றால் உண்மையில் என்ன அர்த்தம்? இந்தச் செயல்முறை முந்தைய ஜனாதிபதித் தேர்தல்கள் போலவே இந்தத் தேர்தலிலும் இருந்தது. அதாவது தேர்தல் அதிகாரிகள் தங்கள் மாநிலங்களில் முடிவுகளை அட்டவணைப்படுத்தி சரிபார்த்து முடிவுகளை வெளியிடுகிறார்கள்.

அவர்கள் தற்காலிக வாக்குகளையும் மாநில மற்றும் சில நேரங்களில் மாவட்ட சட்டங்களின்படி சவாலுக்கு உட்பட்ட வாக்குகளையும் சரிபார்க்கிறார்கள். அவற்றைச் சரிபார்த்த பிறகு, முடிவுகள் சான்றளிக்கப்படுகின்றன. இதுவே தேர்தல் முடிவுகளை அதிகாரபூர்வமாக்கப்படும் முறையான செயல்முறையாகும். இச்செயல் முறை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும்.

ஆனால் பொதுவாக மாநில அரசுச் செயலாளர் அல்லது மாநில தேர்தல் அலுவலகம் வாக்குகள் எல்லாம் எண்ணி முடிந்ததும் சந்தித்து முடிவுகளை அத்தாட்சிப்படுத்தி சான்றிதழில் கையெழுத்திடுவார்கள். அந்த உத்தியோகபூர்வ சான்றிதழ் இறுதியானதும் எந்தவொரு வேட்பாளரும் இதற்கெதிராக வெற்றிகரமாகப் போட்டியிடுவது மிகவும் கடினம் ஆகும். மாநிலங்கள் தங்கள் தேர்தல் முடிவுகளைச் சான்றளிக்கும் திகதிகள் பின்வருவனவாகும்.

ரோட்தீவு, டென்னசி, ஹவாய் மற்றும் நியூஹாம்ப்ஷயர் மாநில சட்டத்தில் எழுதப்பட்ட குறிப்பிட்ட சான்றிதழ் காலக்கெடுக்கள் இல்லை. நவம்பர் 5 - டெலாவேர்மாநிலம், நவம்பர் 10 - ஒக்லஹோமா, லூசியானா, தெற்கு டகோட்டா மற்றும் வெர்மான்ட் மாநிலங்கள், நவம்பர் 11 - தென்கரோலினா, வயோமிங் ஆகிய மாநிலங்கள், நவம்பர் 13 - மிசிசிப்பி மாநிலம், நவம்பர் 16 - வெர்ஜீனியா மாநிலம், நவம்பர் 17 - புளோரிடா, நவம்பர் 18 - ஆர்கன்சாஸ், இடாஹோ, மசாசூசெட்ஸ் ஆகிய மாநிலங்கள், நவம்பர் 20 - ஜோர்ஜியா, வடக்கு டகோட்டா ஆகிய மாநிலங்கள், நவம்பர் 23 - கென்டக்கி, மைனே, மிச்சிகன், பென்சில்வேனியா மற்றும் உட்டா மாநிலங்கள், நவம்பர் 24 - வோஷிங்டன் டி.சி. மற்றும் இந்தியானா, மினசோட்டா, நியூமெக்சிகோ, வடகரோலினா, ஓஹியோ ஆகிய மாநிலங்கள், நவம்பர் 25- அலபாமா, அலாஸ்கா ஆகிய மாநிலங்கள், நவம்பர் 30 - அரிசோனா, கொலராடோ, அயோவா, மொன்டானா, நெப்ராஸ்கா ஆகிய மாநிலங்கள், டிசெம்பர் 1 - கன்சாஸ், நெவாடா, விஸ்கான்சின் ஆகிய மாநிலங்கள், டிசெம்பர் 3 - கனெக்டிகட், ஒரேகான், டெக்சாஸ், வோஷிங்டன், மேற்கு வெர்ஜீனியா ஆகிய மாநிலங்கள், டிசெம்பர் 4 - இல்லினாய்ஸ் மாநிலம், டிசெம்பர் 7 - நியூயோர்க் மாநிலம், டிசெம்பர் 8 - மேரிலாந்து, மிசூரி, நியூஜெர்சி ஆகிய மாநிலங்கள், டிசெம்பர் 11 - கலிபோர்னியா மாநிலம்.

இவ்வாறு ஒவ்வொரு மாநிலமும் உத்தியோகபூர்வமான தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் திகதியை அறிவித்திருந்ததோடு சகல முடிவுகளும் டிசெம்பர் 8 ஆம் திகதிக்கு முன் சான்றிதழ் அளிக்கப்பட்டிருந்தன.


**மாநிலமும் உத்தியோகபூர்வமான தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் திகதியை அறிவித்திருந்ததோடு சகல முடிவுகளும் டிசெம்பர் 8 ஆம் திகதிக்கு முன் சான்றிதழ் அளிக்கப்பட்டிருந்தன.**

மாநில மட்டத்தில் ஜனாதிபதி 2020 உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் திகதிகள்

| திகதி | மாநிலங்களின் எண்ணிக்கை | திகதி | மாநிலங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நவம்பர்-5 | 1 | நவம்பர்-24 | 6 |
| நவம்பர்-10 | 4 | நவம்பர்-25 | 2 |
| நவம்பர்-11 | 2 | நவம்பர்-30 | 5 |
| நவம்பர்-13 | 1 | டிசெம்பர் -1 | 3 |
| நவம்பர்-16 | 1 | டிசெம்பர்-3 | 5 |
| நவம்பர்-17 | 1 | டிசெம்பர்-4 | 1 |
| நவம்பர்-18 | 3 | டிசெம்பர்-7 | 1 |
| நவம்பர்-20 | 2 | டிசெம்பர்-8 | 3 |
| நவம்பர்-23 | 5 | டிசெம்பர்-11 | 1 |
| சான்றிதழ் காலக்கெடுக்கள் இல்லாத மாநிலங்கள் | | | 4 |

(தொடரும்...)

# மத்திய வங்கி வெளியிட்டுள்ள புதிய 20 ரூபாய் நாணயக்குற்றி



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட புதிய 20 ரூபாய் நாணயக்குற்றி மார்ச் 3 ஆம் திகதி முதல் பணப்புழக்கத்திற்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளது என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி, மார்ச் 03 ஆம் திகதி முதல் 05 மில்லியன் நாணயக்குற்றிகள் பணப்புழக்கத்திற்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளது. (நி)

# 45 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

ஹொரணையில் 45 கிலோ கிராம் ஹெரோயினுடன் இராணுவ வீரர் ஒருவர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2 மாதங்களுக்குள் அதிகாரிகள் கைப்பற்றிய நான்காவது பாரியளவிலான போதைப் பொருள் பறிமுதல் நடவடிக்கை இதுவாகும்.

பாணந்துறை போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் நேற்றுக் காலை மேற்கொண்ட சிறப்பு சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி)

## செய்தித்துளிகள்

# சுதந்திர வர்த்தக வலயத்தில் மேலும் 32 தொற்றாளர்கள்

(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் சுகாதாரப் பிரிவின் கீழ் நேற்று முன்தினம் மாத்திரம் 32 கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நலின் அரியரத்ன தெரிவித்தார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள 03 தொழிற்சாலைகளில் பணிபுரியும் 20 பேர் இவ்வாறு அடையாளம் காணப்பட்ட நோயாளர்களுள் அடங்குவர்.

அவர்களுள் 14 பேர் கட்டுநாயக்க பிராண்டிக்ஸ் தொழிற்சாலையின் ஊழியர்கள் ஆவர்.

இதேவேளை ஏனைய 12 கொரோனா நோயாளர்கள் சீதுவ சுகாதாரப் பிரிவின் கீழ் பதிவாகியுள்ளனர். குறித்த பிரிவுகளில் இதுவரை 908 கொரோனா நோயாளர்கள். அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி)

# பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் பொறளையில் ஒருவர் கைது

(கொழும்பு)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் வருகை தந்ததையும் வாகன பேரணியையும் பதிவு செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பேஸ்புக் நேரலை காட்சிக்காக இவற்றை பதிவு செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் பொறளை பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தனியார் துறையில் இயந்திர தொழிலாளி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவரது நடத்தை பாகிஸ்தான் பிரதமரின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்ததால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி

## மகாவிஷ்ணு வாசம் செய்யும் துளசி

(தொடர்ச்சி)

துளசி பறிக்கும் போது நான்கு இலைகளும் நடுவில் துளிரும் உள்ளதையும் சேர்த்துப் பறிக்க வேண்டும். துளசிச் செடியில் பழையது, புதியது என்ற நிலை எதையும் பார்க்க முடியாது.

ஆகையால் நாம் பறிக்கும் ஒவ்வொரு துளசியும் பூஜைக்கு உகந்ததாகும். ஆனால் அசுத்தமாக இருக்கும் போது துளசிச் செடி பக்கமே போகக் கூடாது.

பௌர்ணமி, அமாவாசை, துவாதசி, மாதப்பிறப்பு, வெள்ளி, செவ்வாய் ஆகிய நாட்களில் துளசியைப் பறிக்கக் கூடாது.

உடலில் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருக்கும் போதும் துளசியைப் பறிக்கக் கூடாது. மதியம், இரவு மற்றும் சந்தியா நேரத்திலும் துளசியைப் பறிக்கக்கூடாது.

எப்போதும் தேவைக்கு ஏற்ப துளசி எடுப்பது நல்லது. விஷ்ணு பூஜை, பிரதிஷ்டை, தானம், விரதம் மற்றும் பித்ரு காரியங்களுக்கு துளசி அவசியம் பயன்படுத்த வேண்டும்.

துளசி கலந்த தண்ணீரில் நீராடினால் புண்ணியம் கிடைக்கும். மரணத்தின் விளிம்பில் இருப்பவர்கள் துளசி தீர்த்தம் உட்கொண்டால் விஷ்ணு லோகம் அடைவார்கள் என்பது நம்பிக்கை.

ஹோமத்தில் துளசி குச்சிகளை போட்டு வழிபட்டால் நினைத்தது நடக்கும்.

துளசியின் நுனியில் பிரம்மா, அடியில் சிவபெருமான், மத்தியில் விஷ்ணு வசிக்கின்றனர். 12 ஆதித்தியர்கள், 11 ருத்ரர்கள், 8 வசுக்கள் மற்றும் அக்னி தேவர்கள் வாசம் செய்கின்றனர். துளசி இலை பட்ட தண்ணீர் கங்கைக்குச் சமமாகக் கருதப்படுகிறது.

துளசியை ஒவ்வொரு துவாதசி திதி தினத்தன்றும் பிரம்மனே பூஜை செய்கிறார். அதுபோல மற்ற தேவர்களும் பூஜிக்கிறார்கள். எனவே யார் ஒருவர் துளசியை பூஜித்து வருகிறாரோ அவர்களது பாவம் விலகி விடும்.

துளசியில் ஏராளமான மருத்துவ குணங்களும் அடங்கியுள்ளது. தினமும் 10 துளசி இலையை சாப்பிட்டால் இரத்தம் சுத்தமாகும். துளசிச் சாறுக்குப் பார்வைக் குறைபாடுகளை நீக்கும் சக்தி உண்டு.

துளசி தீர்த்தம் வயிற்றுக் கோளாறுகளையும் சிறுநீரகக் கோளாறுகளையும் போக்கும். ஜீரண சக்தி மேம்படும். இதயம், கல்லீரல் சீராக செயற்படும்.

வீட்டில் துளசி வளர்ப்பதால் சுத்தமான காற்றை நாம் பெற முடியும். புகை மற்றும் மாசுவை தூய்மைப்படுத்தும் ஆற்றல் துளசிக்கு உண்டு. எனவே அறிவியல் ரீதியாகவும் ஆன்மிக ரீதியாகவும் துளசி உயர்வானது, புனிதமானது, ஈடு இணையற்றது.

இத்தகைய சிறப்புடைய துளசியை வைணவத் தலங்களுக்குச் செல்லும் போது மறக்காமல் வாங்கிச் செல்ல வேண்டும். துளசி சார்த்தி நீங்கள் வழிபடும் போது பெருமானின் அருளை மிக எளிதாகப் பெற முடியும்.

அதுமட்டுமன்றி மகா விஷ்ணுவின் வைகுண்டத்துக்கு சென்று மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ வழி ஏற்படும். துளசி வழிபாடு செய்யும் இளம் பெண்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நடக்கும். செல்வம் சேரும். (முற்றும்)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 90 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 280 | 350 | 250 |
| தக்காளி | 250 | 250 | 140 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 70 | 50 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 160 | 170 | 180 | 200 |
| பூசணி | 100 | 100 | 80 | 100 |
| புடோல் | 180 | 130 | -- | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 280 | 250-350 | 240 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 120 | 140 |
| பாகற்காய் | 160 | 200 | 220 | 240 |
| வெண்டிக்காய் | 250 | 220 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 140 | 150 | 140 | 150 |
| லீக்ஸ் | 130 | 120 | 130 | 140 |
| பீற்றூட் | 120 | 120 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 280 | 300 | 250 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 130 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 140 | 80 |
| கீரை - 1 பிடி | 60 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 120 | 100 | -- | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60 | 110 |
| இராசவள்ளி | 250 | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 160 | 160 | 130 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 50 | 40 |
| வல்லாரை | 40 | 40 | 20-30 | 30 |
| ஈரப்பலா | 150 | 120 | -- | 80 |

# குருதிக் கொடை வழங்குமாறு குருதி மாற்றுப் பிரயோக சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

(குப்பிழான்)

**வடக்கு மாகாணத்தில் நிலவும் குருதித் தட்டு ப்பாட்டை ஈடுசெய்ய உதவுமாறு குருதிக் கொடை யாளர்களுக்கு தேசிய குருதி மாற்றுப் பிரயோக சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**




வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை மற்றும் தெல்லிப்பழை, பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் தீவிரமான குருதித் தட்டுப்பாடு நிலவுகிறது.

எனவே, இயன்றவர்கள் அனைவரும் மேற்குறிப்பிட்ட இரத்த வைத்தியசாலைகளின் வங்கிகளுக்கு உங்களுக்கு இயன்ற நேரத்தில் வருகை தந்து குருதிக் கொடையளிக்குமாறு தேசிய குருதி மாற்றுப் பிரயோக சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் எமக்கு இன்றியமையாதது. இக்கட்டான இந்தச் சூழ்நிலையில் உங்கள் மனமுவந்து இந்தச் சேவையில் பங்கெடுக்குமாறும் தேசிய குருதி மாற்றுப் பிரயோக சேவையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-6-18)

# விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி விசேட வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை மறுதினம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சங்கானை மூளாய் அருள்மிகு ஸ்ரீஹரிகரபுத்திர காயத்திரி அன்னை திருக் கோவிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் திருக்கோவில் பிரதம குருக்கள் முத்த மிழ் குருமாமணி சிவஸ்ரீ தியா. உமாசுதக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம் பெறும் "ஆலய தரிசனம் " நிக ழ்ச்சியில் காலை 6.30 மணி க்கு ஒளிபரப்புச் செய்யப்படும். (5-6)

# 2 ஆம் நாளாகவும் தொடர்ந்தது சுகாதார ஊழியர்கள் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

நாடுபூராகவும் சுகாதார திணைக்களத்தின் சிற்றூழியர்கள் என வகைப்படுத்தப்பட்ட மேற்பார்வையாளர்கள், பரிசாரகர்கள், சுகாதார சிரேஷ்ட கனிஷ்ட ஊழியர்கள், தொலைபேசி பரிவர்த்தனையாளர்கள், சாரதிகள் உட்பட்ட சிற்றூழியர்கள் வகைப்படுத்தப்பட்டவர்கள் நேற்று முன்தினம் முதல் நாடு பூராகவும் சுகயீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் சிற்றூழியர் தர ஊழியர்கள் சுகாதார சேவையில் முறையற்ற நியமனங்களை நிறுத்தக்கோரியும், சிற்றூழியர்களுக்கு மட்டுமேயான இலத்திரனியல் கைவிரல் பதிவை அனைவருக்குமாக்குமாறும், தமக்கு வழங்கப்படவேண்டிய பதவி உயர்வு, கொடுப்பனவு உயர்வு, வழங்கக்கோரியும், போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் ஒருதொகுதி ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஏனையோர் சுகயீன விடுப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6-33-60)

# பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

உலகை ஆட்டிப்படைக்கும் கொடியஉயிர்கொல்லிநோயான கொரோனா ஒழிய வேண்டும் என வேண்டி இறை பிரார்த்தனை இராசையா சிறிதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பிரார்த்தனை நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை மாசி மகத்தில் பிற்பகல் 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் சிறாம்பியடி ஸ்ரான்லி வீதியிலுள்ள ஞான வைரவர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. (5)

# கூட்டம் ஒத்திவைப்பு

(சாவகச்சேரி)

நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவிருந்த சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்படுவதாக நலன்புரிச் சங்க செயலாளர் ந.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (5-6-30)

# தென்தீபம்- இதழுக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)


தீவுகள் தெற்கு வேலணை பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படவுள்ள தென்தீபம்-இதழ் 6 இற்கான ஆக்கங்கள் வேலணை பிரதேசத்தைச் சார்ந்த எழுத்தாளர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள், கலைஞர்கள் படைப்பாளிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

வேலணை பிரதேசத்தின் கலை,கலாசாரம், வரலாறு, சமூக வாழ்வியல், தொல்லியல், நாட்டுப்புறவியல், ஆன்மீகம், மரபுரிமைகள், பண்பாட்டம்சங்களை ஆவணப்படுத்துதல் போன்ற விடயங்களைப் பிரதிபலிக்கும் வகையிலான ஆய்வுக் கட்டுரைகள், கவிதை, சிறுகதை, ஆவணத் தரவுகள் நேர்காணல்கள், பல்சுவை ஆக்கங்கள் போன்ற ஆக்கங்களை வழங்க முடியும்.

படைப்பாளிகளின் ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகையிலும் பிரதேசத்தின் தரவுகளை வெளிக்கொணரும் வகையிலும் இவ் இதழ் அமையவுள்ளது.

ஆக்கங்களை வழங்க விரும்புவோர் எதிர்வரும் 31.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் வேலணை பிரதேச கலாசார பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் தபால் மூலம் அனுப்ப விரும்பு வோர் செயலாளர், கலாசார பேரவை, கலாசார பிரிவு பிரதேச செயலகம், வேலணை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தகுதியான ஆக்கங்கள் கலாசார பேரவையின் மலர்க் குழுவின் தீர்மானத்திற்கமை வாக தென்தீபம்-இதழ் 6 இல் உள்ளடக்கப்படுமெனவும் அனுப்பி வைக்கப்படும் ஆக்க ங்கள் தொடர்பிலான பொறுப்புக்கள் அனைத்தும் படைப்பாளியையே சாரும் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும் எனவும் தீவுகள் தெற்கு வேலணை பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான க. சிவகரன் அறிவித்துள்ளார். (5-6)



BCAS Jaffna Campus இன் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை வீதி, யாழ். நகரில் அமைந்துள்ள மேற்படி நிறுவன மண்டபத்தில் இடம் பெற்றது. இதன்போது நான்கு மாணவிகள் மற்றும் மாணவர்கள் என 35 பேர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்தம் வழங்கினர்.

(படம்- செ. ரவிசாந்)

# கோடா மற்றும் கசிப்பு மீட்பு சந்தேக நபர்கள் தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் கோடா மற்றும் கசிப்பு என்பன மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் புதன் கிழமை சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை யடுத்து கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் மதுவரி உதவி ஆணையாளர் பிரபாத் ஜெய விக்கிரமவின் ஆலோசனைக்கமைய மதுவரி அத்தியட்சகர் தங்கராசாவின் வழிநடத்தலில் சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி அசோகரத்தினம் தலை மையிலான குழுவினர் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொண்டனர்.



இதன்போது 700 லீற்றர் கோடா, ஆறு லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டன.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் தப்பிச்சென்ற நிலையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (5-6-60)

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதிலிருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆண்டுதோறும் ஞாபகமூட்டுவது தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தருமா?

நீதிக்கான வாய்ப்பு இல்லை. இலங்கை அரசாங்கத்தை நம்பவே முடியாது என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர் அறிக்கையிட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அச்சொட்டான கணிப்பு எந்தளவு தூரம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எதிரொலிக்கும் என்பது தெரியவில்லை.

ஆனாலும் சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டிய நேரத்தில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் சொல்லியுள்ளது என்பதை மட்டும் இப்போதைக்குப் பிரஸ்தாபிக்க முடியும்.

தவிர, இலங்கை அரசின் பொறுப்புக்கூறுகின்ற விவகாரம் தொடர்பில் அமெரிக்காவும் காத்திரமான கருத்துக்களை முன்வைத்துள்ளது.

பொறுப்புக்கூறுகின்ற பொறுப்பில் இருந்து இலங்கை அரசாங்கம் விலகுமாக இருந்தால்,

இலங்கை மீது மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமெரிக்கா கருத்து வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்தக் கருத்து செயலுருப் பெறுமா? என்பதில் பலத்த சந்தேகங்களும் ஊகங்களும் இருக்கவே செய்கின்றன.

இதை நாம் கூறும் இந்த நேரத்தில், இப்படிக் கருத்துரைக்கலாமா என்று சிலர் கேள்வி கேட்கலாம்.

ஆனால் இலங்கை அரசின் பொறுப்புக் கூறல் தொடர்பில் கடந்த காலங்களில் அமெரிக்கா விடுத்த அறிக்கைகளும் கருத்துக்களும் இலங்கையை கடுமையாக எச்சரிப்பதாக இருந்தன.

இருந்தும் அவை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் சுவட்டுத் தொடர் திருவிழாவுக்கான அலங்காரமாக இருந்தனவேயன்றி, சுவட்டுத் தொடர் முடிந்ததும் அந்த எச்சரிக்கைகள் வான்வெளியில் பறந்து மறைந்து போயின.

இதை இன்னும் சுருங்கக்கூறுவதாயின், 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழினத்துக்கு எதிராக நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் அமெரிக்கா முன்வைத்த கருத்துக்கள் இலங்கை அரசாங்கத்தை வழிக்குக் கொண்டுவருமென தமிழ் மக்கள் நம்பினர்.

ஆனால் அதே அமெரிக்கா 2009ஆம் ஆண்டுக்கு முன்னதாக இலங்கைக்கு வழங்கிய உதவிகளை, 2009 இற்குப் பின்னர் இரட்டிப்பாக்கி வழங்கியது.

அப்படியானால் அமெரிக்காவின் எச்சரிக்கை வெறும் கருத்தும் அறிக்கையுமேயன்றி அதனால் தமிழ் மக்களுக்கு எந்த விமோசனமும் கிடைக்கவில்லை என்பதே யதார்த்தம்.

இதுவே உண்மையும் எங்கள் அனுபவமுமாக இருக்கையில், 2021ஆம் ஆண்டின் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் சுவட்டுத் தொடர் நடைபெறுகின்ற இவ்வேளையில், அமெரிக்கா முன்வைத்த கருத்துக்கள்; பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கைக்கான இன்னொரு ஞாபகமூட்டல் கடிதமேயன்றி, அதனால் வேறு எந்தப் பயனும் ஏற்படப் போவதுமில்லை. தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கப் போவதுமில்லை.

ஆக, ஆண்டு தோறும் கூடி ஞாபகமூட்டுவது, போரின் இழப்பால் துன்புறும் நம் தமிழினத்தை எந்த வகையிலும் ஆற்றுப்படுத்தப் போவதில்லை.

# தமிழ் மொழியை நிராகரிப்பதால் தேசியவாதிகளென பலர் நினைக்கின்றனர்

## பாராளுமன்றில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

இன்று பெரும்பாலான தலைவர்கள் தாம் தேசியவாதிகள் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு தமிழ்மொழி உள்ளிட்ட ஏனைய மொழிகளை நிராகரித்து செயற்படுவதால் அவர்கள் தாம் மிகச் சிறந்த தேசியவாத தலைவர்கள் என நினைத்துக் கொண்டுள்ளனர் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சபையில் சுட்டிக் காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை, முன்னாள் சபாநாயகர் வி.ஜே.மு லொக்கு பண்டார விற்கான அனுதாபப் பிரேரணை எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் அதில் உரையாற்றும் போதே இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், வி.ஜே.மு லொக்கு பண்டார அவர்கள் இந்த நாட்டின் பாகுபாடு இல்லாத அதே வேளை சுதேசிய கொள்கைகளை ஊக்குவிக்கும் தலைவராக வாழ்ந்து காட்டினார்.

இன்று பலர் இனவாத கொள்கையில் இருந்து கொண்டு தனி சிங்கள கொள்கையில் இருந்தால் தாம் வீரர்கள் என நினைத்து செயற்படுகின்றனர். ஆங்கிலத்தை நிராகரிப்பதன் மூலமும் தமிழ்மொழி உள்ளிட்ட ஏனைய மொழிகளை நிராகரித்து செயற்படுவதால் அவர்கள் தாம் மிகச்சிறந்த தேசியவாத தலைவர்கள் என நினைத்துக் கொண்டுள்ளனர்.

ஆனால் வி.ஜே.மு லொக்கு பண்டார அவர்கள் அவ்வாறு இல்லாது சகல மொழிகளிலும் தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்தினார்.

அவர் சபாநாயகராக இருந்த காலத்தில் நானும் அவருடன் பல சர்வதேச கூட்டங்களில் கலந்துகொள்ள வாய்ப்பு கிடைத்தது. அந்த சந்தர்ப்பங்களில் ஒரு போதும் இலங்கையின் கொள்கையை பிளவுபடுத்தவோ, அரசாங்கத்தை விட்டுக்கொடுக்கவோ அவர் முயற்சிக்கவில்லை. எல்லா சந்தர்ப்பங்களிலும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பேசிய நபர் அவர். அவர் ஒரு இலங்கையர் என்ற உணர்வுடன் செயற்பட்டார் என்றார். (ம-3)

# அனுமதி அட்டையினை பெற்றுக்கொள்ளல்

(கிளிநொச்சி)

கிளி/ஜயனார்புரம் அ.த.க பாடசாலையில் 2020 இல் (2021 march) க.பொ.த சா/தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் இதுவரை பரீட்சை அனுமதி அட்டையினை பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் காலை 8.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை பாடசாலையில் பெற்றுக்கொள்ளலாம் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ம-3)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### வாழ்க்கை ஒரு போர் (யுத்தம்)

வாழ்க்கை ஒருபோர். மருத்துவர்கள் நோய்களை எதிர்த்துப் போராடுகின்றனர். வழக்கறிஞர்கள் அநீதியை எதிர்த்துப் போராடுகின்றனர். ஆசிரியர்கள் அறியாமையை எதிர்த்துப் போராடு கின்றனர்.

போராட விருப்பமும் மனத்துணிவுமில்லாத போது மனச்சோர்வு ஏற்படுகின்றது. அர்ஜுனன் மனச்சோர்வடைந்தான். அப்போது அவன் போரிட விரும்பவில்லை. அவன் கைகளில் இருந்து வில் கீழே விழுந்தது. அவன் விரல்கள் நடுங்கின. அப்போது ஸ்ரீகிருஷ்ணர் போரிடும்படி தூண்டி னார். அவனை எழுச்சியுடன் போரிட முடிவு செய்தது.

அர்ஜுனனுக்கு நிகழ்ந்தது போன்று போரிட வேண்டும் என்ற முடிவு உங்கள் மனச்சோர் வைப் போக்கிடும்.

"போராடு, போராடு இறுதிவரை போராடு" என்கிறார் ஒருவர். "முடிந்தவரை அல்ல விட்டுக்கொடுக்கும் வரை" என்கிறார் இன்னொருவர். உங்கள் உடல்கூட ஒரு போர்க்களம் தான்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

யாரிடத்திலும் கடுஞ்சொல்லாக வெடுவெடு என்றுபேசக்கூடாது. இனிமையாகவும் குளிர்ச் சியாகவும் பேச வேண்டும். கரவாகவும் ஒருவரிடம் பழகக்கூடாது.

தாய்மொழியிலும் தாய்நாட்டிலும் தன் சமயத்திலும் பற்றிருக்கவேண்டும். ஆனால் பிறமொழிகளிடத்திலும் பிற சமயங்களிலும் வெறுப்புணர்ச்சி இருக்கக்கூடாது.

சமயவெறி, மொழிவெறி, ஜாதிவெறி இருக்கக்கூடாது. மொழிவெறியும் மனிதனுடைய முன்னேற்றத்தைத் தடுத்து விடும். (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்கல்5மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில் நாகபடுவான், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, சோலை, நாச்சிக்குடா, முழங்காவில் ஜெயபுரம் வலைப்பாடு, வேரவில், பாலாவி, முழங்காவில் கடற்படை முகாம், முழங்காவில் ஐஸ் தொழிற்சாலை, 651 பிரிகேட் இராணுவ முகாம், வெள்ளாங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வெற்றிலை தீபம் ஏற்றி வழிபடுவதால் ஏற்படும் நன்மைகள் என்ன?

பொதுவாக நம் நாட்டில் நடக்கும் முக்கியமான அனைத்து நிகழ்வுகளையும் வெற்றிலையையானது அலங்கரிக்கும்.

வெற்றிலையின் நுனியில் லட்சுமியும் நடுவில் சரஸ்வதியும் காம்பில் பார்வதிதேவியும் இருப்பதாக வரலாறு சொல்கிறது.

அந்தளவிற்கு வெற்றிலையானது புராணம் காலங்களை எல்லாம் தாண்டி தற்போதும் பயன்படுத்தப்பட்டு கொண்டிருக்கின்ற ஒரு புனிதப் பொருளாக கருதப்படுகின்றது.

இப்படிப்பட்ட ஒரு தனி சிறப்பு மிகுந்த வெற்றிலையை தீபமேற்றி வழிபட வெற்றிகள் வந்து சேரும் என சொல்லப்படுகின்றது.


வெற்றிலை உங்களுக்கு இருக்கும் எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும், அது விரைவாக தீர்ந்துவிடும். அந்தவகையில்வெற்றிலையை வைத்து எப்படி தீபம் ஏற்றலாம் என பார்ப்போம். முதலில் சேதாரம் இல்லாத, நுனிப்பகுதி உள்ள 6 வெற்றிலைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். (தொடரும்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# நிலைகொள் வேளாண்மை

நமது அன்றாட தேவைகள் மற்றும் செயற்பாடுகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றன, அவை ஏனைய உயிரினங்கள் மற்றும் சுற்றுச்சூழலில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்று நாம் சிந்திப்பது உண்டா?

இந்த பிரபஞ்சத்தில் இருக்கும் சக்தி எவ்வாறு புதுவடிவம் எடுத்து மாறிக் கொண்டு இருக்கின்றதோ அவ்வாறே இயற்கை வளங்களும் ஒன்றிலிருந்து ஒன்று மாற்று வடிவம் எடுத்துக்கொண்டு இருக்கின்றன. அவ்வாறான வளங்களை சிறப்பாக கையாண்டு செயற்படுத்துவதே நிலைகொள்வேளாண்மை ஆகும்.





**1. நிலை கொள்வேளாண்மை என்றால் என்ன?**

நிலைகொள்வேளாண்மை (**Permaculture=Permanent+Agriculture**) என்னும் ஆங்கிலப்பதத்தை அவுஸ்திரேலியாவைச்சேர்ந்த இரு விஞ்ஞானிகள் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறிமுகப்படுத்தினார்கள். நிலைகொள் வேளாண்மை என்பது உயிர்வாழ் அங்கிகள் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு பாதகம் விளைவிக்காத முறையில் கையாளப்படும் உணவு விளைவிப்பு முறை. இவ்வாறான வேளாண்மை. நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கக் கூடியதும் மற்றும் பொருளாதார ரீதியாக நிலையானதுமாகும்.

**2. நிலை கொள்வேளாண்மையின் மூன்று அடிப்படை விழுமியங்கள் என்ன?**

நிலைகொள் வேளாண்மையில் மண்வளம், நீர் வளம், தாவரங்கள் மற்றும் உயிர்வாழ் அங்கிகள் வாழும் பூமியைப் பாதுகாத்தலே முதலாவது விழுமியம் ஆகும். இங்கு எல்லா உயிரினங்களும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. மனிதனுடைய பழக்க வழக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் சுற்றுச்சூழலுடன் ஒன்றிணைந்ததாக இருத்தல் வேண்டும்.

பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தான் உயிர்வாழ்வதற்கான தேவையான மூலப்பொருட்களை இயற்கையில் இருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இதுவே இரண்டாவது அடிப்படை விழுமியம் ஆகும். இங்கு எல்லா இயற்கை வளங்களும் சமமாக பகிர்ந்து மனிதனால் உபயோகிக்கப்படல் அவசியம். இவ்வாறான இயற்கை வளங்களைக் கொண்டு செய்யப்படும் வேளாண்மையின் விளைவுகளை நண்பர்கள் மற்றும் உறவினர், அயலவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் மூன்றாவது அடிப்படைக்கொள்கையாகும்.

நிலைகொள்வேளாண்மை இயற்கை மற்றும் நிலையான விவசாய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. ஆதலால் இவ்வேளாண்மையில் இருந்து மனிதன் மட்டுமன்றி சுற்றுச்சூழல் மற்றும் எல்லா உயிர்வாழ் அங்கிகளும் நன்மையை மட்டுமே பெற்றுக்கொள்கின்றன.

**3. நிலைகொள்வேளாண்மையில் கிடைக்கும் நன்மைகள்?**

இயற்கை வளங்களான மழைநீர், சூரியஒளி இங்கு பிரதான மூலப்பொருட்களாக உபயோகிக்கப்படுகின்றது. சூரிய ஒளியைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை மற்றும் "சோலர் செல்" (**Solar cell**) மின் உற்பத்தி செய்தல், மழைநீரை பெரிய கொள்கலன்கள் அல்லது செயற்கை குளங்களில் சேகரிப்பதன் மூலம் பயிர்ச்செய்கை மற்றும் வேளாண்மையில் பயன்படுத்தல் இங்கு கிடைக்கும் நன்மைகள் ஆகும். இன்றைய காலகட்டத்தில் மழைநீர் சேகரிப்பு என்பது மிகவும் அரிதாக பிடிக்கப்படுகின்றது. ஆரம்காலத்தில் எமது முன்னோர்கள் மழைநீர் சேகரிப்பதிலும் குளங்களை கட்டுவதிலும் ஆர்வம் காட்டினார்கள்.

அதனால் அன்றாட காலகட்டத்தில் அவர்களால் தன்னிறைவான (**Self-sufficient**) ஒரு வாழ்கை முறையை கொண்டு நடத்தக்கூடியதாக இருந்தது. ஆனால் இன்று நாம் எல்லா வகையான இயற்கை மூலப்பொருட்களையும் பணம் கொடுத்து வாங்குவதும் அதனை மாசடைய அனுமதிப்பதும் கவலைக்குரிய விடயமாகும்.

நிலைகொள்வேளாண்மையில் உணவு உற்பத்தி இயற்கையாக கிடைக்கின்றது. எமக்கு தேவையான மரக்கறி வகைகள், பழங்கள், நிழல்தரும் மரங்கள், ஆடு, மாடு, பன்றி, முயல், கோழி, வாத்து, வளர்ப்புக்கள் மற்றும் அவற்றிலிருந்தான உற்பத்திகள் சேதனைமுறை கோட்பாடுகளை பின்பற்றுகின்றன. உதாரணமாக பயிர்ச்செய்கையில் இயற்கை உரப்பாவனை இயற்கை பூச்சி கொல்லி மற்றும் பூச்சி விரட்டி பாவனை, அத்துடன் இயற்கை தீவனம் மற்றும் இலைகுழைகள் கொடுத்து வளர்க்கப்படும் விலங்கு மற்றும் பறவைகள் என்பவற்றை குறிப்பிட்டுக் கூறமுடியும்.

இவ்வேளாண்மை வளர்ப்பிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருட்களான மேலதிக உணவுப் பொருட்கள் மற்றும் விலங்கு பறவைகளின் கழிவுப்பொருட்கள் இயற்கை உரமாக்கப்படுகின்றது. எனவே இங்கு எல்லா வளங்களும் வீணாக்கப்படாமல் பயன்படுத்தப்படுகின்றன.

பிரிகையாக்கத்திற்கு உள்ளாகாத கழிவு வெளியேற்றங்களை குறைத்தலின் மூலம் மாசாக்கத்தை குறைத்தல் இவ்வேளாண்மையில் இருந்து பெறப்படும் முக்கியமான நன்மைகளில் ஒன்று. இன்றைய காலகட்டத்தில் கழிவு முகாமைத்துவம் மிகவும் மோசமான நிலையை சந்தித்துள்ளது. வீண்விரயம் செய்யாமல் வினைத்திறனுடன் வளங்களைப் பயன்படுத்துதல் இவ்வேளாண்மையின் மூலக்கருவாக உள்ளதால் இங்கு கழிவு வெளியேற்றம் மற்றும் முகாமைத்துவம் இயற்கையோடு ஒன்றித்து காணப்படுகின்றது. ஆதலால் இங்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நிலம், நீர் மற்றும் வளி மாசடைவதற்கான சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுகின்றது.

இங்கு மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை முறையை நோக்குவோமேயானால் சாதாரண விவசாய பயிர்ச்செய்கை முறைக்கு புறம்பான முறையில் நடைபெறுகின்றது. சாதாரண விவசாயப் பயிர்ச் செய்கையில் குறிப்பிட்ட ஒரு பயிர்களே விவசாயிகளால் பயிரிடப்படுகின்றது. இது ஆங்கிலத்தில் "**Monoculture**" எனப்படும். ஆனால் நிலைகொள்வேளாண்மையில் பல்வேறு வகையான காய்கறிகள், பழங்கள் பயிரிடப்படுகின்றன. ஆதலால் நமது உணவுத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுகின்றது. தேவைக்கு எஞ்சிய அறுவடைகள் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் உடன் பரிமாறப்படுகின்றது. இதனால் சமூக இடைவெளிகள் குறைக்கப்படுவதுடன் புரிந்துணர்வுகள் அதிகரிக்கின்றன.



பீடைகள் ஆக்கிரமிப்பு மற்றும் நோய் தொற்றுக்கள் விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. "**Monoculture**" செயன்முறையில் பீடைத்தொற்றுக்கான சாத்தியங்கள் மிக அதிகமாக காணப்படும். மாறாக இவ்வேளாண்மையில் பெரும்பாலான பீடை மற்றும் தொற்றுக்கள் தவிர்க்கப்படுகின்றன.

ஏனென்றால் இங்கு ஒரு வகையான பயிர்கள் பயிரிடப்படுவதில்லை. பல வகையான பயிர்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து பயிரிடப்படுகின்றது (ஊடு பயிர்முறை- "**Intercropping**") உதாரணமாக :- கரட்:-வெங்காயம், பூசணி:-சோளம், தக்காளி:-வெங்காயம்/உள்ளி. இவ்வாறு பயிரிடப்படுவதால் குறிப்பிட்ட பயிரினை தாக்கும் பூச்சிகள் திசை மாற்றப்படுகின்றன. இதனால் பூச்சித்தாக்குதல் மற்றும் தொற்றுக்கள் தவிர்க்கப்படுகின்றன.

நிலைகொள்வேளாண்மையை பின்பற்றுவதில் பல்வேறு நன்மை பயக்கும் விடயங்கள் இருந்தாலும் அதனை செயற்படுத்துவதில் சில சிரமங்கள் உள்ளன. இவ்வேளாண்மையில் இருந்து கிடைக்கப்படும் பயன்கள் மிக குறுகிய காலத்தில் கிடைப்பதில்லை. அதனால் பெரும்பாலும் விவசாயிகள் இதனை விரும்புவதில்லை.

இவ்வாறான சூழல் தொகுதியை உருவாக்க பணம், நேரம் மற்றும் மனிதவலு மிகவும் அவசியம். இவ்வாறான சுய அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ள அதிகமானோர் விரும்புவதுமில்லை. ஆனால் நாம் மேலத்தேய நாட்டவர்களின் புதிய வாழ்க்கைமுறை ஈடுபாட்டை நோக்குவோமேயானால், அது முன்னோர்களால் பின்பற்றப்பட்டு வந்த தன்நிறைவான வாழ்கை முறையை நோக்கி உள்ளது. இவ்வாறான வாழ்க்கை முறை பெரும்பாலானவர்களின் ஆசைப் பட்டியலில் (**Whis-list**) முக்கியமான ஒன்றாக இடம்பிடித்துள்ளது. நம் அயல் நாடான இந்தியாவிலும் இவ்வாழ்க்கை முறை மிகவும் விரைவாக பரவிக் கொண்டு வருகின்றது.

சூழலியலாளர்கள் அன்றி பல்வேறு தொழில் அதிபர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் தங்களுடைய ஓய்வு நேரங்களை இவ்வேளாண்மையில் செலவிடுகின்றனர். தமது குடும்ப உறுப்பினர்களுடன் வேலைகளைப் பகிர்ந்து செய்வதன் மூலம் அவர்களுடன் சந்தோசமான தருணங்களையும் இனிமையான நினைவுகளையும் உருவாக்கிக் கொள்ள முடிகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களை தவறவிடுவதன் மூலமே மன அழுத்தம் மற்றும் மன உளைச்சல் போன்ற வியாதிகளில் மூழ்கி நம்மை நாமே இழந்து கொள்கின்றோம். ஏன் நம் நாட்டில் கூட இவ்வாறான வாழ்க்கை முறையை சிலர் பின்பற்றுகின்றனர்.

நிலைகொள்வேளாண்மை மற்றும் அதனைப் பின்பற்றும் பல்வேறு நாட்டவர்கள் தமது சொந்த அனுபவங்கள் மற்றும் கையாளும் யுத்திகளை **Facebook (Eg:- Humans who arrow food)** மற்றும் **YouTube (Eg :- Happen films, Gardening Australia, Thottam Siva)** இணையத்தில் பதிவு செய்துள்ளனர்.

அவ்வாறு தேடியதில் அறிந்து கொண்ட வாழ்க்கை முறையே நிலை கொள்வேளாண்மை வாழ்க்கை முறை (**Perma culture life-style**) இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்க்கை முறை இயற்கை நமக்களித்த கொடை. அதன் பயனை நாம் அனைவரும் பெறுவதுடன் அதனைப் பாதுகாப்பதும் மிக அவசியம்.

**ஆக்கம்**
**விதுஷி-குகநேசன்**
**செயன்முறை வழிகாட்டுநர்**
**(Demostrator)**
**விலங்கியல்துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## ஐ.நா ஆணை...

மேலும் முன்னைய தீர்மானங்களின் உள்ளடக்கங்களையும் நடைமுறைப் படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உரிமை பேரவை இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதற்காக மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் சுவிஸர்லாந்து வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம-3)

## வவுனியாவில்...

இந்நிலையில் நேற்றுக் காலை அவரது வீட்டின் முற்றத்தில் சடல மாக கிடப்பதனை அவதானித்த அவரது மனைவி அதிர்ச்சியடைந்தார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவத்தில் கூமாங்குளம் பகுதியை சேர்ந்த கந்தையா மர்லின்ரயன் என்ற 31 வயதான ஒரு பிள்ளையின் தந்தையே மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

## தெல்லிப்பழை...

சாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட 451 பேரின் பிசிஆர் பரிசோதனையில் 2 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை வைத்தியசாலை மருத்துவர் மற்றும் பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர் மிருசுவில் தொற்றாளர் பங்கேற்ற தேவாலயம் கூட்டம் ஒன்றில் பங்கேற்றிருந்தார்" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33,101)

## தேசிய வெசாக்...

விசேட கூட்டம் நேற்று மாலை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

வெசாக் பண்டிகை சர்வதேச பண்டிகையாக அறிவிக்கும் வகையில் இலங்கையில் இந்த ஆண்டு வெசாக்கை தேசிய ரீதியில் ஓர் இடத்தை முதன்மைப்படுத்தி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. (ம-3)

## 2 பேர் பலி...

இதற்கமைய இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 459 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நாட்டில் நேற்றும் + 466 பேர் தொற் றுக்குள்ளாகியுள்ளனர். (ம-3)

## பாதிக்கப்பட்ட...

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்வதில் இலங்கை தோல்வி அடைந்துள்ளதன் ஊடாகவும் ஜெனிவா பிரேரணையில் இருந்து விலகியதன் மூலமும் இலங்கை அரசாங்கம் நேர்மையான முறையில் உள்ளக ரீதியில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான கதவை மூடிவிட்டுள்ளது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட் நேற்று முன்தினம் ஜெனிவாவில் தெரிவித்தார்.

எனவே இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக இவ்வாறு பொறுப்புக்கூறலில் தோல்வியை கண்டுள்ளதால் சர்வதேச ரீதியில் இலங்கையின் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான மாற்றுவழியை உறுப்பு நாடுகள் ஆராய வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் இலங்கை தொடர்பான விவாதம் நடைபெற்றது.

இதன்போது ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை உத்தியோகபூர்வமாக பேரவையில் தாக்கல் செய்தார்.

அறிக்கையை தாக்கல் செய்துவிட்டு உரையாற்றும் பொழுதே இந்த விடயங்களைமனித உரிமை ஆணையாளர் வெளிப் படுத்தினார். (ம-3)

## தமிழ...

கும், ஒருமைப் பாட்டிற்கும் நேரடியாக பங்களிப்பு செய்யும் என்பதை உறுதியாக நம்புகிறோம் .

எனவே, தமிழ் சமூகத்தின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றுவது இலங்கையின் சிறந்த நலன்களுக்கானது என்பதையே இந்தியா பரிந்துரைக்கிறது என்றார். (ம-3)

## உங்கள் மகனை...

களுடன் தான் நடத்திய சந்திப்பு குறித்து தனது ருவிட்டர் பதிவிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உங்கள் மகனை அல்லது கணவரை இழப்பது குறித்து சிந்தித்துப் பாருங்கள் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியமுடியாமலிருப்பது குறித்து கற்பனை செய்து பாருங்கள் என பதிவிட்டுள்ளார்.

அதுவே காணாமல்போனவர்களின் உறவினர்களின் மனதை மிகவும் வேதனைப்படுத்தும் அனுபவம் என டுவிட்டரில் அலைனா டெப்பிளிட்ஸ் பதிவிட்டுள்ளார். (ம-3)

## உறவு...

லாளர் ஓய்வுபெற்ற அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே இதனை "இந்து" பத்திரிகைக்கு தெரிவித்திருக்கிறார்.

காணாமல் போனோரது உறவினர்கள் 5000 நாட்களைக் கடந்து தங்களது போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அவர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் சந்திக்க இருப்பதாகவும் அவர்களுடைய பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஜனாதிபதி எதிர்பார்த்திருப்பதாகவும் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.(ம-3)

## சிற்றூ...

வத்தினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். (ம-3)

## சடலங்களை...

ழந்தவர்களின் சடலங்களை தகனம் அல்லது நல்லடக்கம் செய்ய அனுமதிக்கும் வர்த்தமானி அறிவிப்பு சுகாதார அமைச்சினால் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.

முன்னைய கட்டளையில் தகனம் மட்டுமே என்ற சொற்பதம் நீக்கப்பட்டு தகனம் அல்லது அடக்கம் என்று மாற்றப்பட்டுள்ளது. (ம-3)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


### சம்பத லக்ன வரம
திகதி 25/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 01
ஆங்கில எழுத்து E — வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 4 9 4 6 8
வெற்றி இலக்கங்கள் 42 64 76
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய
திகதி - 2021.02.25
சீட்டிழுப்பு இலக்கம் - 446
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 38 55 67 77
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9436

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 25.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2704
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 16 46 49 78
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத
திகதி 2021/02/25
சீட்டிழுப்பு இலக்கம் 4409
ஆங்கில எழுத்து L — வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 9 9 1 6 7
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்
திகதி 25/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0775
வெற்றி எழுத்து Q — சுப்பர் இலக்க 17 — வெற்றி இலக்கங்கள் 02 14 19 54

### செவன
திகதி 25/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 317
ஆங்கில எழுத்து B — வெல்லப்பட்ட இலக்கங்கள் 13 14 26 40
NATIONAL LOTTERIES BOARD

### அத கோடிபதி (ADA KOTIPATHI)
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1205
வர்ணம் : கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 25.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 111,827,660
வெற்றி இலக்கங்கள் 06 20 36 41 — ஆங்கில எழுத்து G
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3535
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 25.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,513,475-
வெற்றி இலக்கங்கள் 05 11 59 65 — ஆங்கில எழுத்து C
ரூ. 500/= பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி : 25.02.2021
வெற்றி வாரம் : 3086
வர்ணம் : மண்ணிறம்
வெற்றி இலக்கங்கள் 02 08 52 55 — மீனம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 42,719,052
● சுப்ரி தன யோகய விசேட இலக்கங்கள் - 69656

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1379 — நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 25/02/2021 — தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் I 37 38 40 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் 70,966,114/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

### சங்வர்தன வாசனாவ — அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 413 — திகதி 25.02.2021 — வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 11 13 34 — விதி எண் 9
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,282,688
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## சுன்னாகம்

### 2021ஆம் ஆண்டுக்கான 2ஆவது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இணுவில் கோழிக் கடையை 2021.04.01ஆம் திகதி தொடக்கம் 2021.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 01.03.2021 - 15.03.2021 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி - 16.03.2021 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 16.03.2021 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமையலுவலகம்.

| தொ. இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக்'கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| உடுவில் உப அலுவலகம் | | | | | |
| 1 | இணுவில் கோழிக் கடை | 750.00 | 7,500.00 | 149625.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

க. தர்ஷன், தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (C-1534)

## வீட்டு உணவு

யாழ்.மத்தியில் பீஷா கட்டிற்கு அருகாமையில் நீங்கள் விரும்பத்தக்க வகையில் ஆரோக்கியமான முறையில் சமைத்த மதிய உணவு பெற்றுக் கொள்ளலாம்.
(காலை 10.00 மணிக்கு முன்னர் அறியத்தரவும்.) (5892)

**077 569 1503**

## அண்ணா EXPRESS Courier Service
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள் — லண்டன் 1000/= — 070 3305500, 075 3305500

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## விரைவு பொதிகள் சேவை
**V2 TRAVELS**
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜேர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
- நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
- பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி

(C-1049)
0768226240 DHL

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1439)

**077 436 6704, 077 179 1963**

## மணமகள் தேவை

91, மூலம் 7 இல் செவ்வாய், 30 பாவம், இத்தாலி சிற்றிசன் மணமகனுக்கு மணமகள் உடன் தேவை. (5924)

**077 818 5978**
துர்க்கா திருமண சேவை


## பாராட்டி வாழ்த்துகின்றோம்






இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் 05.02.2020 அன்று கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் (PGDE) பட்டத்தினைப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்
**திரு. தங்கராசா ஐங்கரதீபன்**
(B.A, PGDE, SLTS - II )

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 24.02.2021 அன்று 35ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் (PGDE) பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி. சுனீத்ரா குணசீலன்**
(B.A, PGDE, SLTS - II )

**மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்றுச் சிறப்புற வாழ்த்துகிறோம்.**

(5925)
ஆசிரியர் நலன்புரிச் சங்கம், பாடசாலைச் சமூகம்,
கிளி / பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.


## கணனி திருத்தம்

**I Phone, Android Phone களும் திருத்திக் கொடுக்கப்படும்.**
உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கும், அலுவலகங்களுக்கும் வந்து திருத்தித் தருகின்றோம்.
கணனிகள் விற்றல், வாங்குதல், பழைய கணனிகளும் வாங்கப்படும்.
தொடர்புகளுக்கு : (5920)
**NPO Computer System - 077 243 8537**

## FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச் வகுப்புக்கள் (DELF A1, A2, B1, B2)
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma
French, தமிழ் மொழி மூலம் பூரண விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.
V. ஜெகன் (Trained in France) (C-1455)

19, பலாலி வீதி,ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781

23/2, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிகுளி. 0779789456 / 0212219497 கச்சேரி Fuel Station அண்மையில்

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் Work / Student Visa கான IELTS வகுப்புக்கள்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 24.07.1939 — மறைவு 27.01.2021

கடந்த 27.01.2021 ( புதன்கிழமை ) இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் கார்த்திகேசு முருகையா**
**(சுழல்மேடை முருகையா)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (26.02.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களிற்கும் தொலைபேசி வாயிலாக ஆறுதல் தெரிவித்தோருக்கும் துண்டுப் பிரசுரம் மூலம் துயர் பகிர்ந்தவர்களிற்கும் எம்மோடு எம்துயரில் பங்குபற்றிய அனைவரிற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (5915)

காவி கோவிலடி, மல்லாகம். **077 717 3833** குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் கல்வி வலயத்தின் தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. சந்திரலிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார்.

அமரர்
**வேலாயுதம் கணபதிப்பிள்ளை**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்திற்கு தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழ்ப் பாட ஆசிரியர்கள்
வலிகாமம் கல்வி வலயம்

## 31ஆம் நாள் நன்றி நவிலலும் வழிபாடும்

அமரர்
**தங்கராணி பாலேந்திரகுமார்**



அன்னாரின் 31 ஆவது நன்றி நவிலலும் வழிபாடும் ஆராதனையும் நாளை (27.02.2021) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மதியம் 12.00 மணியளவில் நடைபெறும். (5917)

" தவ இல்லம் " அராலி வடக்கு. — பாலேந்திரகுமார் (கணவர் ) குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.